NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

## அட்டைதாரர் உடன்படிக்கை

## நியதிகளும் நிபந்தனைகளும்

முக்கியமானது: PQ 27 எனும் இலக்க கம்பெனி பதிவிலக்கத்தினைக் கொண்ட நேஷனல் டிவலெப்மன்ட் வங்கி பிஎல்சி இடமிருந்து கையொப்பமிடுவதற்கு அல்லது உறையிடப்பட்ட அட்டையை பாவிப்பதற்கு முன்னதாக, இந்த அட்டைதாரர் உடன்படிக்கையை (உடன்படிக்கை) தயவுசெய்து கவனமாக வாசிக்கவும். ஏற்றுக்கொள்வதன் / அல்லது கையொப்பிடுவதன் வாயிலாக/ அல்லது அட்டையைப் பயன்படுத்துவதன் வாயிலாக நீங்கள் இவ்வுடன்படிக்கையில் காணப்படும் நியதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதுடன் அவற்றினால் பிணைக்கவும்படுவீர்கள்.

1 **வரைவிலக்கணம்**

1.1 “ATM” என்பது அட்டைகளை ஏற்றுக்கொள்ளும் தானியங்கி கூற்று இயந்திரம் அல்லது ஏதேனும் அட்டை செயற்பாட்டு இயந்திரம் அல்லது வங்கிக்கு அல்லது ஏனைய பங்கேற்கும் வங்கி அல்லது வங்கியினால் காலத்திற்கு காலம் பெயர்குறித்துரைக்கப்படும் நிதி நிறுவனங்களுக்கோ சொந்தமான கருவி எனப்பொருள்படும்.

1.2 “ விண்ணப்பதாரி” என்பது அட்டை விண்ணப்ப படிவத்தில் கையொப்பமிட்டுள்ள எவரேனும் நபர் எனப்பொருள்படும்.

1.3 “ வங்கி” என்பது நேஷனல் டிவலெப்மென்ட் வங்கி பிஎல்சி, அதன் பின்னுரித்தாளர்கள் மற்றும் சாட்டுறுத்துநர்கள் எனப்பொருள்படும்.

1.4 “ அட்டை” என்பது அட்டைதாரருக்கு வங்கியினால் விநியோகிக்கப்பட்டதும் முதன்மை, துணைநில் மற்றும் மீளிடமாற்றப்பட்ட அட்டைகளை (அட்டைகள்) உள்ளடக்குவதுமான கொடுப்பனவு அட்டை எனப்பொருள்படும்.

1.5 “ அட்டைக் கணக்கு” என்பது அட்டைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வங்கியினால் பேணப்படும் கணக்கு (கணக்குகள்) எனப்பொருள்படும்

1.6 “ அழைப்பு மையம்” என்பது வங்கியினால் அதனது வாடிக்கையாளர்கள்/பங்குதாரர்களது விசாரணைகள் மற்றும் கரிசனைகளை கையாளுவதற்காக தாபிக்கப்பட்டுள்ள தொலைபேசி தொடர்பு மையம் எனப்பொருள்படும்.

1.7 “ அட்டை மையம்” என்பது NDB வங்கியின் கடனட்டை மையம் எனப்பொருள்படும்.

1.8 “ மூலதனக் கொடுக்கல்வாங்கல்” என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் பொருளிலான நடைமுறை கொடுக்கல்வாங்கல் அல்லாத கொடுக்கல்வாங்கல் எனப்பொருள்படும்.

1.9 “ அட்டைதாரர்” என்பது உடன்படிக்கையின் நியதிகளுக்கமைய வங்கியினால் அட்டை விநியோகிக்கப்பட்ட பெயருடைய தனிநபர் எனப்பொருள்படுவதுடன் அட்டை கணக்கிலான அனைத்து கொடுக்கல்வாங்கல் மற்றும் பொறுப்புடைமைகளுக்கு பொறுப்பான ஆரம்ப மற்றும்

துணைநில் அட்டைதாரர்களையும் உள்ளடக்குகின்றது.

1.10 “அட்டை கொடுக்கல்வாங்கல்” என்பது பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகள், நன்மைகள் அல்லது முன்பதிவுகள் (அட்டைதாரரினாலோ அன்றியோ பயன்படுத்தப்பட்டு, விமான, கப்பல், புகையிரதம், மோட்டார் வாகனம் அல்லது ஏனைய போக்குவரத்து அல்லது ஹோட்டல் அல்லது வேறு தங்குமிட அல்லது வதிவிட அல்லது ஏனைய போக்குவரத்து, வாடகைக்கு அல்லது கூலிவாடகைக்காக அட்டைதாரரினால் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்பாடுகளற்ற ஏதேனும் முற்பதிவுகள் உள்ளடங்கலாக) மற்றும்/அல்லது அட்டைதாரரினால் விற்பனைச் சீட்டு அல்லது காசு முற்பணம் அல்லது ஏனைய வவுச்சர்கள் அல்லது படிவங்கள் அட்டைதாரரினால் கையொப்பமிடப்பட்டதா இல்லையா என்பதனை கருத்திற்கொள்ளாது அட்டைதாரரினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட அஞ்சல், தொலைபேசி அல்லது பெக்சிமைல் கட்டளைகள் அல்லது முற்பதிவுகள் எனும் மட்டுப்பாடில்லாதவை உள்ளடங்கலாக அட்டை அல்லது அட்டை இலக்கம் மற்றும்/அல்லது தனிப்பட்ட அடையாள எண் மற்றும்/அல்லது மட்டுப்பாடுகளற்ற வேறு முறைமைகளைப் பயன்படுத்தி காசு முற்பணங்களைப் பெறுதல் எனப்பொருள்படும்.

1.11 “காசு முற்பணம்” என்பது அட்டைதாரரினால் அட்டை, அட்டை இலக்கம் அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைப் பயன்படுத்தி வங்கியின் அல்லது ஏனைய வேறு வங்கி அல்லது நிதிசார் நிறுவனத்தின் ATMகளிலிருந்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளும் செயல் எனப்பொருள்படும்.

1.12 “விதிப்பனவுகள்” என்பது அட்டை அல்லது அட்டை இலக்கம் அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை அல்லது இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழான பயன்பாட்டிலிருந்து எழுகின்ற அட்டைதாரரினால் செலுத்தப்படவேண்டிய தொகைகள் எனப்பொருளாவதும் மற்றும் அட்டை கணக்கிற்கு வருமதியாகுவதும் தற்போதைய நிலுவையின் ஒரு பாகமாக அமைவதுமான மட்டுப்பாடுகளின்றி அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல் கட்டணங்கள், வட்டிகள், வரிகள், தீர்வைகள், மேலதிக செலவுகள், சேதங்கள், சட்ட செலவுகள், செலவழிப்புகள் என்பவற்றை மட்டுப்பாடுகளின்றி உள்ளடக்குவதுமாகும்.

1.13 “பெருநிறுவன அட்டை” என்பது பணியாளர், நிறைவேற்றதிகாரிகள், பணிப்பாளர்கள் அல்லது தகுதியான பெருநிறுவன அங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அத்தகைய நபருக்கு விநியோகிக்கப்பட்ட அட்டை (அட்டைகள்) எனப்பொருள்படும்.

1.14 “கடன் எல்லை” என்பது காணப்படுகின்ற எவையேனும் அடிப்படை மற்றும் துணைநில் அட்டைக்காக (அட்டைகளுக்காக) அட்டை கணக்கின்மீது வங்கியினால் அதனது முழுமையான தற்றுணிபினில் அனுமதிக்கப்பட்ட மற்றும் காலத்திற்கு காலம் முதன்மை அட்டைதாரருக்கு வங்கியினால் அறிவிக்கப்படும் அதிகூடிய பற்று நிலுவை எனப்பொருள்படும்.

1.15 “இணைந்த கடன் எல்லை” என்பது அட்டைதாரரினால் கொள்ளப்பட்டிருக்கும் அனைத்து கணக்குகளுக்கும் செல்லுபடியாகுமாறு காலத்திற்கு காலம் வங்கியினால் குறித்துரைக்கப்படும் எல்லை எனப்பொருள்படும்.

1.16 “தற்போதைய நிலுவை” என்பது அட்டை கணக்கில் வெளிநிற்கும் மொத்த பற்று நிலுவை (அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல், வட்டி, விதிப்பனவு, கட்டணம், செலவுகள், தீர்வைகள் மற்றும் உண்மையானதோ அல்லது சார்பானதோவாயினும் மற்றும் தற்போது அல்லது எதிர்காலத்தில் உறப்பட்டதோவான சட்ட செலவுகள் உள்ளிட்ட செலவீனங்கள் என்பவற்றை உள்ளடக்குவதும் ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாதுமான) எனப்பொருள்படும்.

1.17 “வைப்பு” என்பது அட்டைதாரரின் கடப்பாடுகளை செயற்படுத்துவதற்கும் மற்றும்/அல்லது அட்டையை விநியோகிக்கும் நோக்கத்திற்காகவும் பிணையமாக வங்கியில் வைக்கப்படும் காசுத் தொகை எனப்பொருள்படும்.

1.18 “குழும உறுப்பினர்” என்பது வங்கியின் துணைநிலை அல்லது ஒருங்கிணைந்த கம்பெனி எனப்பொருள்படும்.

1.19 ‘‘உத்தரவாதம்’’ என்பது வங்கியின் சார்பிலும் அட்டைதாரரின் கடப்பாடுகளை செயற்படுத்துவதற்கும் மற்றும்/அல்லது அட்டையை விநியோகிக்கும் நோக்கத்திற்காகவும் பிணையமாக வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட தொகைக்காக வங்கிக்கு ஏற்புடைய வடிவம் மற்றும் கூறினில் வங்கி, பெருநிறுவன அங்கம், நிறுவனம், தனிநபர், அல்லது எவையேனும் நிதிசார் நிறுவகத்திடமிருந்து கிடைக்கக்கூடிய ஏதேனும் உத்தரவாதம் எனப்பொருள்படும்.

1.20 ‘‘வாழ்நாள் இலவச சலுகை’’ என்பது அட்டையின் வாழ்நாள் முழுதும் வருடாந்தக் கட்டணத்தை தள்ளுபடிசெய்திட அட்டைதாரர் உரித்துடையவராகும் விசேட சலுகை எனப்பொருள்படும்.

1.21 “ வணிகர்” என்பது அட்டைதாரரின் கொடுப்பனவு மாதிரியாக அட்டை அல்லது அட்டை இலக்கத்தினை ஏற்றுக்கொள்வதன்பேரில் பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளை விற்பதற்காக வங்கியினால் அங்கீகரிக்கப்படும் எவையேனும் பெருநிறுவன அமைப்பு, நிறுவனம், நபர் அல்லது வேறு தாபனங்கள் எனப்பொருள்படும்.

1.22 “ குறைந்தபட்ச தொகை வருமதி” என்பது கொடுப்பனவு வருமதித் திகதியில் செலுத்தப்பட்டால் ஏதேனும் தாமதக் கொடுப்பனவு தீர்ப்பனவுகளை தவிர்க்கக்கூடிய, குறைந்தபட்சத் தொகைக்கு உட்பட்ட தற்போதைய நிலுவையின் சதவீதம் எனப்பொருள்படும். ஏதேனும் மிதைத்தொகை தொகைகள் குறைந்தபட்சத் தொகை வருமதிகளில் உள்ளடக்கப்படும்.

1.23 “ மாதம்” என்பது நாட்காட்டி மாதம் எனப்பொருள்படும்.

1.24 “ மிகைத்தொகை” என்பது அட்டைதாரரின் முந்தைய கணக்குக் கூற்றிலிருந்து வெளிநிற்கும் தொகை (ஏதேனும் காணப்படின்) எனப்பொருள்படும். கணக்குக் கூற்றுகளில் காட்டப்படும் ஏதேனும் மிகைத்தொகையானது குறைந்தபட்ச தொகை வருமதியில் உள்ளடக்கப்படுவதுடன் உடனடியாக செலுத்தப்படவேண்டியதாகவும் காணப்படும்.

1.25 “ மிகை எல்லைத் தொகை” என்பது கடன் எல்லையின் மிகையான தற்போதையான நிலுவை எனப்பொருள்படும்.

1.26 “ மிகை எல்லைத் தீர்ப்பனவு” என்பது அட்டைதாரர் கடன் எல்லையை விஞ்சினால் வங்கியினால் விதிக்கப்படும் தீர்ப்பனவு எனப்பொருள்படும்.

1.27 “ கொடுப்பனவு வருமதித் திகதி” என்பது தற்போதைய நிலுவைக் கொடுப்பனவு அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதி அல்லது குறைந்தபட்ச வருமதித் தொகை வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய திகதியாக கணக்குக் கூற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதி எனப்பொருள்படும்.

1.28 “ தஅஇ” என்பது ATM/POSகளில் அட்டையை இலத்திரனியலாக பயன்படுத்த இயலச்செய்வதற்காக அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் தனிப்பட்ட அடையாள இலக்கம் எனப்பொருள்படும்.

1.29 “ விமுமை” என்பது அட்டை கொடுக்கல்வாங்கல்கள் இலத்திரனியல்ரீதியாக செயன்முறைப்படுத்தப்படும் விற்பனை முனைய மையம் எனப்பொருள்படும்.

1.30 “ முதன்மை அட்டைதாரர்” என்பது அட்டைக் கணக்கு பேணப்படும் பெயருடைய அட்டைதாரர் மற்றும் அவரது வாரிசுகள், சாட்டுதல்தாரர்கள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிருவாகிகள் எனப்பொருள்படும்.

1.31 “ உற்பத்திக் குறியீடு” என்பது அட்டை விநியோகிக்கப்படும் கொடுப்பனவு வலையமைப்பின் குறியீடு எனப்பொருள்படும்.

1.32 “ பிணையம்” என்பது அட்டைதாரரின் கடப்பாடுகளது மற்றும்/அல்லது அட்டை விநியோகிக்கப்பட்ட நோக்கம் என்பவற்றினை செயற்படுத்துவதற்காக பிணையமாக வைத்திருக்கப்படும் வைப்பு அல்லது உத்தரவாதம் எனப்பொருள்படும்.

1.33 “ நிதிக் கூற்று” என்பது வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய தற்போதைய நிலுவைகளது விபரங்களை ஒவ்வொரு அட்டைக் கணக்கிற்குமாகக் காட்டி அட்டைதாரருக்கு அனுப்பப்படும் வங்கியின் மாதாந்த அல்லது பருவகால கூற்றுக்கள் எனப்பொருள்படும்.

1.34 “ கூற்றுத் திகதி” என்பது நிதிக் கூற்று குறிப்பிடும் விலைப்பற்றுச்சிட்டை வட்டத்திற்கான இறுதித் தினமும் அத்தகைய தினமொன்றில் வியாபாரங்களை மூடுவதற்கு வங்கியினால் செயன்முறைப்படுத்தப்படும் அனைத்து உள்ளீடுகளையும் உள்ளடக்குவதுமான திகதி எனப்பொருள்படும்.

1.35 “ துணைநில் அட்டை” என்பது முதன்மை அட்டைதாரரினால் பெயர்குறிப்பிடப்பட்ட மூன்றாம் திறத்தவருக்கு வங்கியினால் விநியோகிக்கப்பட்ட அட்டை எனப்பொருள்படும்.

1.36 “ துணைநில் அட்டைதாரர்” என்பது துணைநில் அட்டை விநியோகிக்கப்பட்ட நபர் எனப்பொருள்படும்.

1.37 “ முனையம்” என்பது அட்டைக் கொடுக்கல்வாங்கல்களை இலத்திரனியல்ரீதியாக செயற்படுத்திக்கொள்ளக்கூடிய ஏதேனும் தன்னியக்க கூற்று இயந்திரம் (ATM) அல்லது விற்பனை முனைய மையம் (POS) எனப்பொருள்படும்.

1.38 “ கொடுக்கல்வாங்கல் திகதி” என்பது அட்டைதாரருக்கும் வணிகருக்கும் இடையில் அட்டை கொடுக்கல்வாங்கல் இடம்பெற்றத் திகதி எனப்பொருள்படும்.

1.39 “ கொடுக்கல்வாங்கல் செயன்முறைத் திகதி” என்பது அட்டை கொடுக்கல்வாங்கலானது அட்டைக் கணக்கினில் செயன்முறைப்படுத்தப்படும் திகதி எனப்பொருள்படும்.

1.40 “ பாவனை” என்பது நீர், மின்சாரம் மற்றும் தொடர்பாடல் சேவைகளை உள்ளடக்கியதும் ஆனால் அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாததுமான பாவனை, பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் ஏதேனும் கம்பெனி, அதிகாரமளிக்கப்பட்ட அல்லது நிறுவனம் எனப்பொருள்படும்.

சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்தினாலொழிய, இவ்வுடன்படிக்கையில் உள்ள ஒருமைக்கான அனைத்து குறிப்பீடுகளும் செல்லுபடியாகுமிடத்து பன்மைகளை உள்ளடக்கவேண்டும், அத்துடன் பாலினத்திற்கான அனைத்து குறிப்பீடுகளும் இரு பாலினத்தவர்களையும் மற்றும் மூன்றாம் பாலினத்தவரையும் உள்ளடக்குதல் வேண்டும்.

## 2 அட்டை

2.1. அட்டையானது வங்கியின் ஆதனமாவதுடன் வங்கி கோருமிடத்து அட்டைதாரர் உடனடியாக வங்கிக்கு அதனை மீளவழங்குதலும் வேண்டும்.

2.2. அட்டை பரிமாற்றப்படக்கூடியதல்ல என்பதுடன் அட்டைதாரரினால் மாத்திரமே பிரத்தியேகமாக பயன்படுத்தப்படுதல்வேண்டும். அட்டைதாரர் ஏதாயினும் எச்சந்தர்ப்பத்திலும் அட்டை மற்றும்/அல்லது PIN இலக்கம் எவரேனும் வேறு தனிநபரினால் பயன்படுத்தப்படுவதனை அனுமதித்தலாகாது. அட்டைதாரர் ஏதாயினும் எந்நோக்கத்திற்காகவும் அட்டையை பிணையமாக பயன்படுத்தலாகாது.

2.3. வங்கி அதனது முழுமையான தற்றுணிபினில் முற்கூட்டிய அறிவித்தலும் காரணமும் இன்றி அட்டை மற்றும் அட்டையை பயன்படுத்துவதற்கான அட்டைதாரரின் உரிமை என்பவற்றை எந்நேரத்திலும் மீளப்பெறலாம் என்பதுடன் ஏதேனும் அட்டை கொடுக்கல்வாங்கலுக்கு அதிகாரமளித்தலுக்கான ஏதேனும் காரணத்தை மறுக்கவும் செய்யலாம்.

2.4. வங்கி அதனது முழுமையான தற்றுணிபினில் அட்டையை மீளவழங்கலாம், புதுப்பிக்கலாம் அல்லது மாற்றலாம் அல்லது அவ்வாறு செய்வதற்கு மறுக்கலாம்.

2.5. அட்டை பாதுகாப்பாக காணப்படுகின்றது என்பதனை அட்டைதாரர் எந்நேரமும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## 3 அட்டையின் விநியோகமும் பயன்பாடும்

3.1. அட்டைதாரர் வங்கியிடமிருந்தோ அல்லது அட்டைதாரரால் வங்கிக்கு அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட்ட தபால் அல்லது பொதிகள் சேவையில் அட்டையை பெற்றுக்கொள்ளலாம் அல்லது அட்டைதாரரின் துணிவில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்றாம் திறத்தவரால் பெற்றுக்கொள்ளலாம்/ கையளிக்கப்படலாம்.

3.2. அட்டையை பெற்றுக்கொண்டதும், அழைப்பு மையத்தை தொடர்புகொள்வதன் மூலம் அட்டையை அட்டைதாரர் செயற்படுத்திக்கொள்ளலாம்.

3.3. அட்டையை செயற்படுத்தல் மற்றும்/அல்லது பயன்படுத்தலானது இதனகத்து காணப்படுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் பிணைப்பதுடன் அதனை ஏற்றுக்கொண்டதற்கான தக்க

சான்றாகவும் காணப்படும்.

3.4. இதனகத்தான நியதிகளும் நிபந்தனைகளும் அட்டைதாரரை பிணைப்பதாக காணப்படும் என்பதுடன் இதனகத்தான அவரது கடப்பாடுகளை பிறிதொருவருக்கு சாட்டுதலாகாது.

3.5. இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணைக்கப்பட அட்டைதாரர் விரும்பாத சந்தர்ப்பத்தினில், அட்டைதாரர் அட்டையினை பாதியாக வெட்டி வங்கிக்கு திரும்பவழங்க வேண்டும் என்பதுடன் இதனகத்தாக 18 ஆம் சரத்து (முடிவுறுத்தல்) அதுமுதல் செயற்படத்தக்கதாகும்.

3.6. அட்டை அதன் பயன்பாட்டின்போது இவ்வுடன்படிக்கையின் அனைத்து நியதிகளுக்கும் உட்பட்டதாகவிருக்கும்.

3.7. அட்டை கடன் எல்லைகளுக்குள் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

3.8. அட்டைதாரர் அட்டையின் பயன்பாடு தொடர்பில் வங்கியினால் காலத்திற்கு காலம் இயலச்செய்யப்படும் வசதிகள் மற்றும் நன்மைகளை பயன்படுத்தலாம்.

3.9. அட்டையின் மீது பொறிக்கப்பட்ட செல்லுபடியாகும் காலத்தின் போது, வங்கி அதனது முழுமையான தற்றுணிபிலும் முன்னறிவித்தலின்றியும், எந்நேரத்திலும், அட்டையை பயன்படுத்தும் உரிமையை மீளப்பெறலாம், அல்லது ஏதேனும் குறிப்பிட்ட அட்டை கொடுக்கல்வாங்களுக்கான அதிகாரமளித்தலுக்கான கோரிக்கையை மறுக்கலாம் மற்றும் அத்தகைய மீளப்பெறல் அல்லது மறுப்பினை வெளியிடலாம்.

3.10. அட்டைதாரர் மூலதன கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இவ்வட்டையினை பயன்படுத்தக்கூடாது.

3.11. இலங்கைக்கு வெளியில் அட்டையைப் பயன்படுத்தலானது இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணி திணைக்களம் அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தல் அங்கத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு காணப்படும். அட்டைதாரர் ஏதேனும் உரிமை, இழப்பீடு, அல்லது இலங்கை மத்திய வங்கி, வங்கி, நீதிமன்றம் அல்லது ஏதேனும் ஒழுங்குபடுத்தல் முகவரகத்தினாலான அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைக்கு பங்கமின்றி அனைத்து வெளிநிற்றல் நிலுவைகளையும் தடைநீக்க பொறுப்புடையவராவார்.

3.12. அட்டையை அட்டையின் மீது பொறிக்கப்பட்டுள்ள காலாவதி திகதி வரையில், அத்தகைய காலாவதி வரையில் அட்டை கணக்கின் நிலையானது நடைமுறைக் கணக்கென காணப்படவேண்டும், எனும் நிபந்தனையின் மீது, அட்டை கொடுக்கல்வாங்கல்களுக்கு பயன்படுத்தலாம்,

3.13. அட்டை மற்றும் வங்கியுடனான அனைத்து தொடர்பாடல்கள் தொடர்பிலும் எந்நேரத்திலும் நன்னம்பிக்கையுடன் செயற்படுவதற்கு அட்டைதாரர் பொறுப்பேற்றல் வேண்டும்.

## 4 அட்டை எல்லை மற்றும் இணைந்த கடன் எல்லை

4.1.

(அ) கடன் எல்லையானது வங்கியின் முழுமையான தற்றுணிபினில் தீர்மானிக்கப்படும் என்பதடன் அட்டைதாரருக்கும் எழுத்துமூலமாக அறிவிக்கப்படும். எழுத்துமூலம் அறிவித்தல் வழங்கி காலத்திற்கு காலம் கடன் எல்லையை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. அட்டைக் கணக்கின் ஒட்டுமொத்த கடன் எல்லைக்குள் காசு முற்பணம் மற்றும் கொள்வனவுகளுக்கான தனிப்பட்ட எல்லைகளை வங்கி தாபிக்கலாம்.

(ஆ) கடன் எல்லை விஞ்சிவிட்டதா என்பதனை கணிப்பதில், ஏதேனும் அட்டை கொடுக்கல்வாங்கல்களின் தொகையானது இன்னமும் அட்டைக் கணக்குக்கு பற்றுச்சிட்டையிடப்படவில்லை மற்றும் எதிர்பார்க்கப்படும் அட்டை கொடுக்கல் அல்லது அட்டைதாரரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின்பேரில் வரவிருக்கும் கொடுக்கல்வாங்கலுக்காக வங்கியினால் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள ஏதேனும் தொகை தொடர்பில் வங்கியினால் மூன்றாம் திறத்தவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அதிகாரமளித்தல் உள்ளடங்கலாக, தற்போதைய நிலுவை என்பவற்றை கவனத்துட்கொள்ளவேண்டும்.

4.2. அட்டைத் தொடர்பில் வங்கியினால் அளிக்கப்பட்ட அனைத்து கடன் வசதிகளுக்கும் மற்றும் இவ்வுடன்படிக்கையினை முடிவுறுத்தல் எவ்வாறிருப்பினும், இதன்கீழான தொடர்புடைய அனைத்துக் தீர்ப்பனவுகளுக்கும் அட்டைதாரர் பொறுப்புடையவராகக் காணப்படுதல் வேண்டும்.

4.3. இணைந்த கடன் எல்லையானது அட்டைதாரரினால் வைத்திருக்கப்படும் அனைத்து அட்டை கணக்குகளினதும் நடைமுறை மிகுதிகளுக்காக அனுமதிக்கப்பட்ட அதிகூடியனவாகவும், மற்றும்

வங்கியினால் காலத்திற்கு காலம் அறிவுறுத்தப்படத்தக்கதாகவும் காணப்படுதல் வேண்டும்.

4.4. நடைமுறை நிலுவையானது நிதிக் கூற்றுக்களது விநியோகத் திகதியில் உள்ளவாறு வங்கியின் பதிவுகளின் பிரகாரம் வங்கிக்கு செலுத்தபடுதல் வேண்டும்.

4.5. திரண்ட வெளிநிற்கும் நிலுவைக் கடன் எல்லை விஞ்ச காரணமாகக்கூடிய ஏதேனும் கொள்வனவு அல்லது கொடுக்கல்வாங்கலை அட்டைதாரர் மேற்கொள்ளுதலாகாது.

4.6. அட்டைதாரரினால் அத்தகைய எல்லையை விஞ்சுவதற்கான முற்கூட்டிய எழுத்துமூல அனுமதிப் பெற்றிருந்தாலன்றி, அட்டைதாரர் வங்கியினால் குறித்தொதுக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கடன் எல்லையினுள், எந்நேரத்திலும் அட்டையைப் பயன்படுத்துதல் வேண்டும்.

4.7. விலைப்பற்றுச்சிட்டையிடல் காலத்தில் ஏதேனும் ஒரு புள்ளியில் குறித்தொதுக்கப்பட்ட கடன் எல்லை விஞ்சுமானால், வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் அட்டைக் கணக்குக்கு மிகை எல்லை கட்டணமொன்று விதிக்கப்படும் மற்றும் பற்றுவைக்கப்படும்.

4.8. இந்நோக்கத்திற்காக, கடன் எல்லை விஞ்சியுள்ளதா என்பதனை கணக்கிடும் போது, அனைத்து வங்கி விதிப்பனவுகளும் கருத்திற்கொள்ளப்படும்.

4.9. வெளிநிற்கும் மிகுதி மற்றும் வங்கியினால் ஏலவே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆனால் அத்திகதியில் செயன்முறைப்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்படாத ஏதேனும் அட்டை கொடுக்கல்வாங்கலையும் கணக்கிற்கொண்டதன் பின்னர், அட்டைக் கணக்கினில் நிலுவையாகவுள்ள கடனானது, எந்நேரத்திலுமாக கடன் எல்லையின் பயன்படுத்தப்படாத பெறுமதியாக காணப்படும். காசு முற்பணம் மற்றும் கொள்வனவிற்காக தனிப்பட்ட எல்லைகள் நிறுவப்பட்டிருக்குமானால், நிலுவையாகக் காணப்படும் கடனும் அதற்கிணங்க பிரிக்கப்படும். அட்டைதாரர் அட்டைக் கணக்கின் நிலுவையாகக் காணப்படும் கடனுக்குள்ளேயே (செல்லுபடியாகுமிடத்து முற்பணங்கள் மற்றும் கொள்வனவுகள்) அட்டைதாரர் காணப்படுகின்றார் எனும் முறைமையினில் அட்டைக் கணக்கின்மீதான கொடுக்கல்வாங்கல்களை அட்டைதாரர் உறப்படுத்துவார் என்பதனை அடைதாரர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**5. விலைப்பற்றுச்சிட்டை மற்றும் கொடுப்பனவு**

5.1. இவ்வுடன்படிக்கையின் நியதிகளுக்கு உட்பட்டு, இலங்கையில் அத்தகைய மீள்நிதியிடல், கொடுப்பனவு அல்லது பற்றினையும் தேவையேற்படின் இலங்கை ரூபாவுக்கு மாற்றுதல்களையும் பெற்றுக்கொண்டதன் பின்னரான அதனது வழமையான நடவடிக்கைகளுக்கு இணங்க வங்கி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தில் அட்டைதாரர்களது அட்டை கொடுக்கல்வாங்கல் அல்லது ஏதேனும் கொடுப்பனவு அல்லது கடன் வருமதிகள் தொடர்பிலான ஏதேனும் மீள்நிதியிடலை அட்டை கணக்குக்கு வங்கி பற்றுவைக்கும்.

5.2. பிணக்கிற்குட்பட்ட கொடுக்கல்வாங்கல் காரணமாக பணம் திரும்பப்பெறல், அல்லது மீளவழைத்தல் உள்ளடங்கலாக, இரத்துச்செய்தல், மீளவழைத்தல் அல்லது கொடுக்கல்வாங்கலின் பணம் திரும்பப்பெறுதல் என்பவற்றிலிருந்து விளைவாகும் ஏதேனும் பரிவர்த்தனை இழப்புக்கு அட்டைதாரர் பொறுப்புடையவராவார்.

5.3. பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு மாதாந்த நிதிக்கூற்றுக்களை அனுப்புவதற்கான அட்டைதாரரின் கோரிக்கையை வங்கி ஏற்றுக்கொண்டதன்பேரில், அட்டைதாரருக்கு வங்கியினால் இ-நிதிக்கூற்றுகளாகவோ அல்லது வேறு பரிமாற்ற வழிகள் ஊடாகவோ வங்கியினால் அனுப்பப்பட்ட அனைத்துக் கூற்றுகளும் அட்டைதாரரால் உண்மையானதும் சரியானதும் என அட்டைதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பேணப்படுதல் வேண்டும் என்பதற்கு அட்டைதாரர் உடன்படுகின்றார். இலத்திரனியல் அஞ்சல் வாயிலாக வங்கியினால் பரிமாற்றப்பட்ட கூற்றுக்களது இடர் மற்றும் பொறுப்புகளை அவ்வாறேயும் மற்றும் முழுமையாகவும் ஏற்றுக்கொள்ள அதனது உடன்பாட்டின்மீது வங்கிக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்புகளை எழுப்பமாட்டார் என அட்டைதாரர் வெளிப்படுத்துகின்றார். இணைய பரிமாற்றங்களின்போது, மின்னஞ்சல்களின் தனியுரிமை மற்றும்.அல்லது பாதுகாப்பினைப்

பாதிக்கும் ஏதேனும் வெளியக காரணிகளுக்கு எதிராக வங்கி உத்தரவாதத்தினை வழங்காது என்பதனை அட்டைதாரர் உடன்பட்டு அறிந்துக்கொள்கின்றார். வங்கி அட்டைதாரரின் கோரிக்கையினை அவ்வாறு ஏற்றுக்கொள்வதனாலும் மற்றும் வங்கி மின்னஞ்சல் ஊடாக கூற்றுகள் மற்றும் தகவல்களை பரிமாற்றுவதுடன் தொடர்புடைய அல்லது அதிலிருந்து எழுகின்ற அனைத்து வழக்குகள், நடைமுறைகள், பொறுப்புகள் மற்றும் கோரல்கள், வழக்குகள், சேதங்கள், செலவீனங்கள் மற்றும் செலவுகளுக்கு எதிராகவும் வங்கியை ஈட்டுறுதிப்படுத்துவதற்கு உடன்படுகின்றார்.

5.4. வங்கியினால் விதந்துரைக்கப்பட்ட முறையிலான சேவைகளுடன் தொடர்புடையதாக காலத்திற்கு காலம் வங்கியினால் விதிக்கப்படக்கூடிய அனைத்து கட்டணங்கள் மற்றும் தீர்வைகளை அட்டைதாரர் செலுத்தவேண்டும். அட்டைதாரருக்கான அறிவித்தலுடன் காலத்திற்கு காலம் சேவைகளில் எவற்றையேனும் சேர்க்க, இடைநிறுத்த அல்லது மாற்ற வங்கிக்கு அட்டைதாரர் அதிகாரமு-மளிக்கின்றார். அட்டைதாரர் மின்னஞ்சல் முகவரியிலான மாற்றம் அல்லது அட்டைகளுக்கான இவ்வசதியினை இடைநிறுத்துவதற்கான ஏதேனும் கோரிக்கையை அட்டை நிலையம், இலக்கம் 40, நவம் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை எனும் முகவரிக்கு எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட தகவலின் தரவு முறைகேடு, தாமதம் மற்றும்/அல்லது ஏதேனும் உள்ளீடுகளுக்கு பொறுப்பாகவோ பொறுப்புடைமையுடையதாகவோ வங்கி காணப்படுதாலாகது மற்றும் அத்தகைய தகவல்களை காலத்திற்கு காலமும் மற்றும் எந்நேரத்திலும் இற்றைப்படுத்த மற்றும் மாற்றுவதற்கும் வங்கி உரிமையுடையது என்பதனையும் அட்டைதாரர் மேலும் வெளிப்படையாக உடன்பட்டு அறிந்துக்கொள்கின்றார். சொல்லப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விளம்பர மற்றும் மேம்பாட்டு விடயங்களை அனுப்புவதற்கும் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

5.5. விடயத்திற்கு ஏற்றவாறு வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவிற்கு நாணயமாற்றலுக்கும் அல்லது இலங்கை நாணயங்களை வெளிநாட்டு ரூபாவிற்கு மீள்நாணயமாற்றலுக்குமான, தொடர்புடைய பரிவர்த்தனை வீதங்கள் அல்லது மீள்பரிவர்த்தனை அல்லது பிரயோ-கிக்கப்பட்டவற்றை, இறுதியானதும் சாராம்சமானதாகவும், அவருக்கும் வங்கிக்கும் இடையிலுமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நாணய கொடுப்பனவு மற்றும் நாணயக் கணக்குகளை கருத்திற்கொள்ளாது, வங்கிக்கான அட்டைதாரரின் அதிஉச்ச பொறுப்பானது இலங்கை ரூபாவிலேயே காணப்படுதல்வேண்டும்.

5.6. அனைத்து நாணயமாற்றல்கள் மற்றும் மீள்நாணயமாற்றல்களிலுமான எந்தவொரு பரி-வர்த்தனைகளிலும் வங்கி இழப்பின்றி காணப்படுதல் வேண்டும் என்பதுடன், பரிவர்த்தனைகளிலான அத்தகைய இழப்புகளுக்கு எதிராக வங்கியை ஈட்டுறுதிப்படுத்துவதற்கு அட்டைதாரர் இத்தால் பொறுப்பேற்கின்றார். “பரிவர்த்தனைகளிலான இழப்பு” என்பது நாணயங்களிலான ஏதேனும் ஏற்றஇறக்கம், அல்லது ஈடுபட்டுள்ள ஏதேனும் நாணயத்தின் மதிப்பிழப்பு காரணங்களினால், வங்கி, அல்லது அதன் முகவர்கள் அல்லது தொடர்புடையவர்களினால் அனுபவிக்கப்படும் ஏதேனும் இழப்பு எனப்பொருள்படுதல் வேண்டும்.

5.7. அட்டைதாரரின் மரணத்தின் பேரில், அவரது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள், நிருவாகிக்கள், சட்டப் பிரதிநிதிகள், அனைத்து வருமதியாகவுள்ள பணங்கள், செலுத்தப்படவேண்டியவை, மற்றும் அட்டைக் கணக்கினில் வெளிநிற்பவற்றை தீர்க்கவும் மீளச்செலுத்தவும் பொறுப்புடையவராவார்கள் என்பதற்கு அட்டைதாரர் இத்தால் உடன்படுகின்றார்.

## 6. PIN இலக்கங்களை வழங்குதல் மற்றும் அட்டை மற்றும் PIN இலக்கங்கள் காணாமற்போதல்

6.1. ஏதேனும் ATM/POS களில் அட்டையை ஏற்கும் ஏதேனும் ATM/POS களிலான பயன்பாட்டுக்காக அட்டைதாரருக்கு வங்கி PIN இலக்கத்தினை வழங்கலாம். PIN இலக்கமானது அட்டைதாரரின் துணிவின்பேரில் அவருக்கு தபால் அல்லது பொதிகள் அஞ்சல் சேவையில் அனுப்பப்படலாம்

என்பதனை அட்டைதாரர் ஏற்றுக்கொள்கின்றார்.

6.2. PIN இலக்கத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல்களுக்கும் அட்டைதாரர் முழுப்பொறுப்புடையவராகுதல் வேண்டும். அட்டைதாரர் சூழ்நிலை என்னவாயினும் PIN இலக்கத்தினை வேறொரு நபருக்கும் வெளிப்படுத்துதுல் கூடாது.

6.3. PIN இலக்கத்துடன் தொடர்புடையதாக ஏதேனும் அட்டை கொடுக்கல்வாங்கல் தாக்கமுற்ற வங்கியின் பதிவானது அட்டைதாரரின்மீது பிணைப்புடையதாகக் காணப்படும். வங்கி முறைமைக்கான தகவலானது அட்டைதாரர் அட்டை கொடுக்கல்வாங்கலை அட்டைதாரர் அனுமதித்துள்ளார் என்பதற்கான தக்க சான்றாகக் காணப்படுதல் வேண்டும் என்பதடன் அட்டைதாரரின்மீது பிணைப்புறுவதாகவும் காணப்படுதல்வேண்டும்.

6.4. அட்டைதாரர் அட்டை மற்றும் PIN இலக்கம் காணாமற்போதல் மற்றும் திருடுபோதலை தடுப்பதற்காக PIN இலக்கம் மற்றும் அட்டையின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு சாத்தியமான அனைத்து பரா-மரிப்புகளையும் பயன்படுத்த வேண்டும்

6.5. அட்டை காணாமல் அல்லது திருடுபோகின்ற சந்தர்ப்பங்களில், சொல்லப்பட்ட காணாமற்போதல் அல்லது திருட்டினை அது குறித்த தகவல்களுடன் அழைப்பு மையத்திற்கும் மற்றும்/அல்லது அத்தகைய காணாமற்போதல் அல்லது திருடு இடம்பெற்ற நாட்டின் பொலிசாருக்கு தொலைபேசி வாயிலாகவோ அல்லது தொலைநகல் வாயிலாகவோ உடனடியாக அறிவிக்கவேண்டும். எனினும், அத்தகைய சந்தர்ப்பங்களின்போது, தொலைபேசி அல்லது தொலைநகல் செய்தியானது அட்டைதாரரினால் எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

6.6. அட்டையின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாட்டின் விளைவாக அட்டை கணக்கிற்கு வரவுவைக்கப்படும் அனைத்துத் தொகைகளுக்கும், அத்தகைய அட்டை காணாமற்போனமை அல்லது திருடுபோனமை வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும் வங்கிக்கு எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்படாத வரையில் அட்டைதாரர் பொறுப்புடையவராக காணப்படுதல் வேண்டும்.

6.7. அட்டை காணாமற்போன, திருடுபோன அல்லது தவறாக பயன்படுத்த சூழல் குறித்து அட்டைதாரரின் வசமுள்ள அனைத்து தகவல்களையும் அட்டைதாரர் வங்கிக்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் காணாமற்போன/திருடுபோன அட்டையினை மீட்க உதவுவதற்காக வங்கியினால் அத்தியாவசியம் எனக் கருதப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தலும் வேண்டும்.

6.8. ஏதேனும் காணாமற்போன அல்லது திருடுபோன அட்டைக்கான மீளிடப்பெற்ற அட்டையொன்றை அல்லது இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு புதிய PIN இலக்கத்தை வங்கி அதனது தற்றுணிவில் வழங்கலாம்.

6.9. அட்டைதாரர் காணாமற்போன அல்லது திருடுபோன அட்டையை மீளப்பெறுகின்ற சந்தர்ப்பங்களில், அதனைப் பயன்படுத்தாது அதனை பாதியாக வெட்டி வங்கிக்கு உடனடியாக திரும்பவழங்குதல் வேண்டும். அட்டைதாரர் PIN இலக்கத்தினை அதனை எவரேனும் வேறொரு திறத்தவருக்கு வெளிப்படுத்தியமையை வங்கிக்கு முறையிட்டதன் பின்னர் பயன்படுத்தக்கூடாது.

6.10. அட்டைகள் காணாமற்போதல் தொடர்பாக, வங்கி வர்த்தக வலையமைப்புக்கு அறிவிப்பதற்கும் மற்றும் புதிய அட்டையை வழங்குவதற்குமான நிருவாக செலவுகளை உள்ளடக்கிய

விதிப்பனவொன்றை விதிக்கலாம்.

**7. அட்டைக் கணக்கு**

7.1. அட்டைக் கணக்குகளில் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள், வங்கிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் கட்டணங்கள் மற்றும் ஏதேனும் சட்டக் கட்டணங்கள் மற்றும் வங்கியினால் உறப்பட்ட அனைத்து வேறு நிருவாகக் கட்டணங்கள், மற்றும் அட்டையின் பயன்பாட்டிலிருந்து எழுகின்ற வங்கியினால் உறப்பட்ட எதேனும் இழப்புகள் உள்ளடங்கலாக அட்டைதாரரின் வேறேதேனும் பொறுப்புகளினை அட்டைக் கணக்குகளில் பற்றுவைக்கும். அவ்வாறு பற்றுவைக்கப்பட்ட அனைத்துத் தொகைகளையும் வங்கிக்கு செலுத்துவதற்கு முதன்மை அட்டைதாரர் மற்றும் துணைநில் அட்டைதாரர் ஆகியோர் கூட்டாகவும் கடுமையாகவும் பொறுப்புடையவர்களாவார்கள்.

7.2. குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு வருமதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ குறைந்தபட்ச வருமதித் தொகையாக காட்டப்படும் தொகையையேனும் வங்கிக்கு செலுத்தக்கூடிய அட்டைதாரருக்கு நிதிக் கூற்றுக்களை வங்கி அனுப்பும். எனினும், அவர் தன்னுடைய தற்றுணிபினில் வருமதியாகும் முழுத்தொகை அல்லது குறைந்தபட்ச தொகை வருமதிக்கு மேலான ஏதேனும் தொகையினை செலுத்தலாம்.

7.3. இவ்வுடன்படிக்கையினை மீறுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தினில், அல்லது அட்டைதாரர் வங்குரோத்து நடவடிக்கையொன்றைப் புரிகையில் அல்லது முதன்மை அட்டைதாரரின் மரணம் அல்லது வங்கியின் முழுமையான தற்றுணினிபினில், இவ்வுடன்படிக்கையின்கீழ் வருமதியாகவுள்ள அனைத்துத் தொகைகளும், ஏதேனும் நிலையியற்கட்டளையினால் விதிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்பாடுகள் எவற்றுக்கேனும் உட்பட்டு முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும்.

7.4. வங்கிக்கான எந்தவொரு கொடுப்பனவும் வங்கியினால் பெறப்படுகின்றபோதும் மற்றும் அட்டைக் கணக்குக்கு பற்றிடப்படுகின்றபோதும் மாத்திரமே பயனுறுவதாகும். இவ்வுடன்படிக்கையின்கீழான அட்டைதாரரின் கடப்பாடுகள் தொடர்பில் வங்கிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் காசோலையினை பூர்த்திசெய்வதற்கு நிதி காணப்படுகின்றது என்பதனை முதன்மை அட்டைதாரர் உறுதிசெய்யவேண்டும்.

**8. காசு முற்பணம்**

8.1. கடன் எல்லையின் அதிகூடிய சதவீதம் வரையிலும் (வங்கியினால் விதந்துரைக்கப்பட்டவாறு) மற்றும் போதுமான கடனின் கிடைப்பனவிற்கு உட்பட்டும் மற்றும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை சட்டம் மற்றம் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டும் காசு முற்பணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

8.2. காசு முற்பணங்களை அட்டை மற்றும் PIN இலக்கங்களைப் பயன்படுத்தி வங்கியின் அல்லது சொல்லப்பட்ட வங்கி அல்லது நிறுவனத்தின் ATMகளை பயன்படுத்துவதற்கான உடன்படிக்கையினை வங்கி கொண்டுள்ள ஏனைய வங்கி அல்லது நிறுவனங்களது ATMகளில் பெற்றுக்கொள்ளலாம். வேறு வங்கிகள் / நிறுவனங்களது ATMகள் தொடர்பில், ஒவ்வொரு காசு முற்பணத்தினதும் தொகையானது தொடர்புடைய ATM இன் நாளாந்த பணம்மீளப்பெறல் எல்லைக்கு செல்லுபடியானதாகக் காணப்படுதல் வேண்டும்.

8.3. காசு முற்பணங்கள் தொடர்பில், ATM, வங்கி, வர்த்தகம், முகவர், உள்ளூர் அல்லது நாடுகளின் எல்லைகள் மற்றும் கட்டுப்பாடுகள், காலத்திற்கு காலம் வழங்கப்படும் வெளிநாட்டு நாணயப் பரி-வர்த்தனை ஒழுங்குபடுத்தல்கள் மற்றும்/அல்லது ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளது கட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்படும்.

8.4. காசு முற்பணத்தினைப் பெறுவதற்காக அட்டைதாரரின் அட்டைப் பயன்பாடானது வங்கியினால் காலத்திற்கு காலம் விதந்துரைக்கப்பட்டவாறு நிதிசார் தீர்வைகள், காசு முற்பணத் தொகை மீதான வட்டி மற்றும் கட்டணங்களை செலுத்துவதற்கு அட்டைதாரரது உடன்பாட்டினை கட்டமைப்பதாக கருதப்படுதல்வேண்டும். முழுமையாக செலுத்தி முடிக்கப்படும் வரையில் முற்பணத் திகதியிலிருந்து காசு முற்பணத்தின்மீது நிதிசார் விதிப்பனவொன்று விதிக்கப்படும். வங்கி காலத்திற்கு காலம், அட்டைதாரரினால் செலுத்தப்படவேண்டிய நிதிசார் விதிப்பனவுத் தொகைகளை மாற்றலாம்.

8.5 வெளிநாட்டு நாணயத்தில் காசு முற்பணமொன்றை பெற்றுக்கொள்ளும் பணம்மீளப்பெறுதல் தொடர்பில், வெளிநாட்டு செலாவணி திணைக்களம் அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக அத்தகைய நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதற்கான சான்றுகளை அட்டைதாரர் வைத்திருத்தல் வேண்டும்.

**9. துணைநில் அட்டை**

9.1. வங்கி அதனது முழுமையான தற்றுணிபினில் முதன்மை அட்டைதாரரினால் பெயர்குறிக்கப்பட்ட மற்றும் முதன்மை அட்டைதாரர் மற்றும் துணைநிலை அட்டைதாரரினாலும் (அட்டைதாரர்களினாலும்) கூட்டாக கோரிக்கைவிடப்பட்ட நபருக்கும் (நபர்களுக்கும்) துணைநிலை அட்டையை (அட்டைகளை) அனுமதித்து வழங்கலாம். துணைநிலை அட்டைதாரர் (அட்டைதாரர்கள்) 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாகவும் நெருங்கிய குடும்ப உறுப்பினராகவும் (உறுப்பினர்களாகவும்) (வாழ்க்கைத்துணை, குழந்தை, பெற்றோர், சகோதரன் அல்லது சகோதரி) காணப்படுதல்வேண்டும். முதன்மை அட்டைதாரரின் நேரடி தங்கிவாழ்வபவரான மாணவர்கள் கல்வி நோக்கத்திற்காக மாத்திரமே துணைநிலை அட்டைக்கு உரித்துடையவர்களாவதுடன் இவ்வுடன்படிக்கையின் நியதிகளும் நிபந்தனைகளும் அத்தகைய நபரை (நபர்களை) பிணைப்பதாகவும் காணப்படுதல் வேண்டும்.

9.2. முதன்மை அட்டைதாரருக்கு சாட்டப்பெற்ற கடன் எல்லையானது துணைநிலை அட்டைதாரர்களது கடன் எல்லையையும் உள்ளடக்கியதாக காணப்படுவதுடன் முதன்மை அட்டைதாரர் மற்றும் துணைநிலை அட்டைதாரர்கள் அவர்களது முறையேயான அட்டைகள் ஊடாக உறப்பட்ட விதிப்பனவுகளது மொத்தத் தொகையினை சொல்லப்பட்ட கடன் எல்லையை விஞ்சுவதற்கு அனுமதித்தலாகாது.

9.3. துணைநிலை அட்டையின் செல்லுபடியாகும் காலமானது முதன்மை அட்டையின் செல்லுபடியாகும் காலப்பகுதியில் தங்கியுள்ளது; துணைநிலை அட்டையின் முடிவுறுத்துகையானது முதன்மை அட்டையினை முடிவுறுத்தாது.

9.4. வங்கிக்கான முதன்மை அட்டைதாரர் மற்றும் துணைநிலை அட்டைதாரரின் பொறுப்பேற்றல்கள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் மற்றும் இதனகத்தான வங்கியின் உரிமைகள் என்பன முதன்மை அட்டைதாரரும் துணைநிலை அட்டைதாரரும் ஒருவருக்கு எதிராக ஒருவர் கோரக்கூடிய ஏதேனும் பிணக்கு அல்லது எதிர்கோரலின் ஏதேனும் வழியினால் பாதிக்கப்படுதலாகாது.

9.5. அட்டைதாரர் மற்றும் துணைநில் அட்டைதாரர் (அட்டைதாரர்கள்) இருவரும் அவர்களது அட்டை கணக்குகள் இணைந்ததாகவோ அல்லது தனித்தனியானதோவாயினும் அட்டையினது (அட்டைகளது) பயன்பாட்டினால் செயன்முறைப்படுத்தப்படும் அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல்களுக்கும்

கூட்டாகவும் கடுமையாகவும் பொறுப்பாகுதல் வேண்டும்.

9.6. முதன்மை அட்டைதாரர் பாதியாக வெட்டிய துணைநில் அட்டையுடன் வங்கிக்கு எழுத்துமூலமான ஒப்புதலை அனுப்புவதன் வாயிலாக துணைநில் அட்டையின் அதிகாரத்தினை மீளப்பெறலாம்.

9.7. மேலுள்ள 9.6 இல் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக பணம்மீளப்பெறும் திகதிக்கு முன்னதாக துணைநில் அட்டைதாரரினால் அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல்களும் செல்லுபடியானதாகவும் அட்டைதாரரை பிணைப்பதாகவும் காணப்படுவதுடன் அது அட்டைதாரரின் பொறுப்பாகவும் காணப்படுகின்றது.

9.8. சட்டரீதியானதாகவோ அல்லது ஏனையவகையிலோ துணைநில் அட்டைதாரரின் ஏதேனும் சட்ட இயலாமை அல்லது திறனின்மை அல்லது துணைநில் அட்டைதாரரினால் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏதேனும் மீறுகையின் காரணமாக ஏனைய வகையில் வங்கிக்கு உறப்படும் ஏதேனும் இழப்புகள், சேதம், பொறுப்பு, செலவீனங்கள் மற்றும் செலவுகளுக்கு எதிராக முதன்மை அட்டைதாரர் வங்கியை ஈட்டுறுதிப்படுத்துதல் வேண்டும்.

**10. அட்டையின் ஏற்புடைமை**

10.1. உற்பத்தி குறியீடுகள் ஊடாக அட்டை ஏற்புகளை காட்சிப்படுத்தியிருக்கும் வர்த்தக தாபனங்கள் மற்றும் நிதிசார் நிறுவனங்களில் அட்டை ஏற்றுக்கொள்ளப்படும். எவ்வாறாயினுமுான ஏதேனும் காரணத்தினால் அட்டையினை ஏற்க ஏதேனும் வர்த்தக/நிதிசார் நிறுவனம் மறுப்பதற்கு வங்கி பொறுப்பேற்காது அல்லது பொறுப்புடையாகமாட்டாது. ஏதேனும் வளாகத்தினில் அட்டை விளம்பரப்படுத்தல் விடயங்கள் அல்லது உற்பத்தி குறியீடு காட்சிப்படுத்தப்பட்டிருப்பதானது அவ்வளாகங்களில் கிடைக்கக்கூடிய அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளும் அட்டையினால் கொள்வனவு செய்யப்படலாம் என்பதற்கான உத்தரவாதமாகாது.

10.2. பெற்றோல் நிலையம் அல்லது கூடங்களிலிருந்து பெற்றோல், டீசல், எரிவாறு முதலிய உற்பத்திகளது கொள்வனவானது பொருத்தமான கையாளுகை மற்றும் சேவைக் கட்டணங்களுக்கு உட்பட்டதாகும்.

10.3. எனினும், ஏதேனும் வர்த்தக/வங்கியினால் அட்டை ஏற்றுக்கொள்ள மறுக்கப்படுவதை, இடத்தின் பெயர், கொடுக்கல்வாங்கலின் திகதி மற்றும் நேரம் மற்றும் வங்கயின் விசாரணைக்கு உதவும் ஏனைய விபரங்களுடன் வங்கிக்கு அட்டைதாரர் முறையிடலாம்.

**11. நிதிக் கூற்றுகள்**

11.1. கணக்குக் கூற்றானது முந்தைய கணக்குக் கூற்றுத் திகதியிலிருந்து நடைமுறைக் கணக்குக் கூற்று வியாபாரம் முடிவடைந்த திகதி வரையில் அட்டைக் கணக்கினில் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் செயன்முறைப்படுத்தப்பட்ட அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் விபரமாகக் குறிப்பிடும்.

11.2. கணக்குக் கூற்றில் வெளிநிற்கும் தொகையானது பின்வருமாறு மேற்கொள்ளப்படும்;

11.2.1 அனைத்து மின்னஞ்சல், இணைய கொடுக்கல்வாங்கள் மற்றும் அட்டைக் கணக்கில் விதிப்பனவாக்கப்படுமாறு அட்டைதாரர் அல்லது எவரேனும் துணைநில் அட்டைதாரரினால் (அட்டைதாரர்களினால்) அதிகாரமளிக்கப்பட்ட தொலைபேசி கட்டளைகள் உள்ளடங்கலாக அட்டையினைப் பயன்படுத்துவதனால் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள்.

11.2.2 செல்லுபடியாகுமிடத்து தன்னியக்க கூற்று இயந்திரங்கள் (ATM) ஊடாக உறப்பட்டவை உள்ளடங்கலாக அட்டைக் கணக்கிலான காசு முற்பணங்கள்.

11.2.3 கடனட்டையை பயன்படுத்துவதனால் உறப்பட்ட அனைத்து அரசாங்க வரிகள் மற்றும் ஏனைய எல்லா வங்கி விதிப்பனவுகளுடன் இணைந்ததாக இதனகத்து 12 ஆம் உறுப்புரையின் கீழ் (கொடுப்பனவு மற்றும் விதிப்பனவு) (உம்: கட்டணங்கள், சேவை விதிப்பனவுகள், இன்னபிற) குறிக்கப்பட்ட விதிப்பனவுகள்.

11.3. முற்தீர்மானிக்கப்பட்ட திகதியில் ஒவ்வொரு மாதமும் அட்டைக் கணக்கின் அட்டை கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கணக்குக் கூற்றொன்றை இலத்திரனியல் அஞ்சலாக அட்டைதாரருக்கு வங்கி அனுப்பும். இறுதிக் கணக்குக் கூற்றிலிருந்து வெளிநிற்கும் மிகுதியில்லை மற்றும் எந்தவொரு அட்டைக் கொடுக்கல்வாங்கலும் வங்கியினால் பெறப்படவில்லை எனில், கணக்குக் கூற்றுக்கள் எதுவும் அனுப்பப்படமாட்டாது.

11.4. ஏதேனுமான ஒரு காரணத்திற்காக கணக்குக் கூற்றுக்களை பெற்றுக்கொள்ளாமையானது உரிய காலத்தில் வருமதிகளை செலுத்தாதிருப்பதற்கான செல்லுபடியான காரணமாக காணப்படமாட்டாது. வழமையான கணக்குக் கூற்றுத் திகதியிலிருந்து 10 நாட்களிற்குள் கணக்குக் கூற்றினை அட்டைதாரர் பெற்றுக்கொள்ளவில்லையெனில், அட்டைதாரர் செலுத்தவேண்டிய தொகையை உறுதிப்படுத்திக்கொள்ள அழைப்பு மையத்தை அழைக்கலாம். எதிர்பாரா சூழ்நிலைகள் மற்றும் வங்கியின் கட்டுப்பாட்டுக்கு வெளியிலான சூழ்நிலைகளின் காரணமாக கணக்குக் கூற்று பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளாமைக்காக வங்கியை பொறுப்பானதாக நிறுத்தமுடியாது.

11.5. அட்டைதாரர் அட்டைக் கணக்கு தொடர்பில் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு நிதிக் கூற்றினையும் பரிசீலிக்க வேண்டும் மற்றும் அதனகத்தான ஏதேனும் சார்த்தப்படும் தவறுகளை நிதிக் கூற்றுத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வங்கியின் அழைப்பு மையத்திற்கு அறிவிக்க வேண்டும். சொல்லப்பட்ட 14 நாட்களுக்குள் சார்த்தப்படும் தவறினை வங்கிக்கு அறிவிக்க அட்டைதாரர் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அலட்சியத்தில், நிதிக் கூற்றுகளும் அதனகத்தான அனைத்து உள்ளீடுகளும் அட்டைதாரரை பிணைப்பதாகக் காணப்படுதல் வேண்டும் என்பதுடன் அதனகத்தான உள்ளடக்கங்களுக்கான தக்க சான்றாகவும் கருதப்படவேண்டும் அத்துடன் அதன்பின்னர் அட்டைதாரர் நிதிக் கூற்றின் உள்ளடக்கங்களில் பிணக்குறுதலாகாது. முதன்மை அட்டைதாரரினால் எழுத்துமூலமாக வங்கிக்கு வழங்கப்பட்ட சமீபத்திய முகவரிக்கு அனைத்து கணக்குக் கூற்றுகளும் இலத்திரனியல் ரீதியாக அனுப்பப்படும். அட்டைக் கணக்கு தொடர்பிலான ஏதேனும் முறைப்பாட்டினை அட்டைதாரர் 011 244 88 88 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது வங்கியினால் காலத்திற்கு காலம் பெயர்குறிக்கப்படும் மற்றும் அதனது உத்தியோகப்பூர்வ வலைத்தளங்களில் வெளியிடப்படுகின்ற வேறேதேனும் இலக்கங்களில் அழைப்பு மையத்தை அழைப்பதன்மூலம் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

11.6. ஏதேனும் கணக்குக் கூற்று தொடர்பில் ஏதேனும் தொகைக்கான அட்டைதாரரினாலான வங்கிக்கான கொடுப்பனவானது அக்கணக்குக் கூற்றினில் காட்டப்பட்டுள்ள உள்ளீடுகள் அட்டைதாரரை பிணைப்பதாகவும் அட்டைதாரர் அதனை ஏற்பது குறித்த தக்க சான்றாகவும் காணப்படுதல் வேண்டும்.

**12. (அ) கொடுப்பனவும் விதிப்பனவும்**

12.1. இப்பகுதியில் குறிப்பீடுசெய்யப்படும் அனைத்து தற்போதைய கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளின் விபரங்கள் உத்தியோகப்பூர்வ வலைத்தளத்தில் ,(www.ndbbank.com), தோன்றுகின்றவாறான பொது தீர்வை பிரசுரங்களில் உள்ளவாறு வங்கியினால் வெளியிடப்பட்ட சேவை மற்றும் விலை வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டனவாகும், அவற்றின் பிரதிகளைக் கோரிப்பெற்றுக்கொள்ளலாம். இவ்விதிப்பனவுகள் காலத்திற்கு காலம் முற்கூட்டிய அறிவித்தலுடன் திருத்தப்படும்.

12.2. அட்டை மற்றும் துணைநில் அட்டைகள் விநியோகிக்கப்படும்போது வங்கியினால் குறித்துரைக்கப்படும் இணைவுக் கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணமொன்றை அட்டைதாரர் வங்கிக்கு (வங்கியின் கோரிக்கையின்பேரில்) செலுத்தவேண்டும். அட்டை முடிவுறுத்தப்பட்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் வருடாந்த கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

12.2.1 வங்கி வாழ்நாள் இலவச சலுகையை வழங்குகின்றபோது, அத்தகைய சலு-கையானது அட்டை செயலிலும் அட்டை கொடுக்கல்வாங்கல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற வரையிலுமாக செல்லுபடியானதாக காணப்படுதல்வேண்டும்.

காப்புறுதித் திகதியிலிருந்து அல்லது ஏதேனும் தொடர்ச்சியான காலப்பகுதியிலிருந்து மூன்று (03) மாதத்தினை விஞ்சுகின்ற தொடர்ச்சியான காலப்பகுதிக்கு அட்டை செயலற்றதாகக் காணப்படுமாயின், வங்கி, அதனது முழுமையான தற்றுணிபினில், வாழ்நாள் இலவச சலுகையை மீளப்பெறவும் மற்றும் நிலவுகின்ற தீர்வைகளின்படி செல்லுபடியாகும் வருடாந்த கட்டணத்தை மீளநடைமுறைப்படுத்தவும் உரித்துடையதாகும். அத்தகைய மீளநடைமுறைப்படுத்தல்களின்மீது, செல்லுபடியாகும் வருடாந்த கட்டணத்தை எவ்வித மறுப்புமின்றி செலுத்த அட்டைதாரர் அதன்பின்னர் பொறுப்புடையவராவார்.

12.3. கணக்குக் கூற்றினில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு பிந்தாதவாறு முழுமையாகவும் கொடுப்பனவாகவும் காணப்படும் வருமதியான கணக்குக் கூற்றினில் குறித்துரைக்கப்பட்ட தற்போதைய மிகுதியாக வரையறுக்கப்பட்ட அனைத்து விதிப்பனவுகளது மொத்தத் தொகையினையும் முழுமையாக செலுத்துதல் வேண்டும் மற்றும் கொடுப்பனவு வருமதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வங்கியினால் தற்போதைய மிகுதியின் கொடுப்பனவு பெறப்பட்டிருக்குமாயின் அட்டைதாரருக்கு எவ்வித நிதிசார் விதிப்பனவுகளும் (காசு முற்பணம் புறநீங்கியதாக) உறப்படமாட்டாது.

12.4. அட்டைதாரர் வழங்கப்பட்ட கொடுப்பனவு வருமதித் திகதியில் மொத்தக் நிதிக்கூற்று வெளிநிற்றல்களையும் செலத்தாவிடின், வங்கியின் உத்தியோகப்பூர்வ வலைத்தளமான www.ndbbank.com இல் காணப்படும் தீர்வைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அல்லது வங்கியினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டவாறு காலத்திற்கு காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் வட்டி வித்திக்கப்படும். கொடுக்கல்வாங்கல் பதிவிடப்பட்ட திகதியிலிருந்து வட்டியானது நாளாந்த வீதத்தில் கணக்கிடப்படுகின்றது மற்றும் ஏதேனும் முற்கொணரப்பட்ட மிகுதியானது தற்போதைய நிதிக்கூற்று மாதத்தின் முதலாவது திகதியில் தொடங்கி அடுத்த நிதிக்கூற்றுத் திகதி வரையில் விதிக்கப்படும். வட்டி கணிப்பு முறையின் மாதிரி விளக்கத்திற்கு அட்டைதாரர் கடனட்டை நிதிக்கூற்றினை பார்க்கலாம்.

12.5. அட்டைக் கணக்கொன்றினை திறந்ததினைத் தொடர்ந்து அட்டைதாரரினால் பெறப்படும் முதலாவது நிதிக்கூற்று கணக்கு திறக்கப்பட்ட திகதியிலிருந்து நிதிக்கூற்று உருவாக்கப்பட்ட திகதி வரையில் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் மற்றும் வருமதியாகவுள்ள விதிப்பனவுகளது விவரங்களை கொண்டிருக்கும். வட்டி விதிப்பனவொன்று காணப்படும்போதில் காசு முற்பணமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காதவிடத்து, இந்நிதிக்கூற்றில் வட்டி விதிப்பனவுகள் குறித்துக்காட்டப்படமாட்டாது. கொடுப்பனவு வருமதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கொடுப்பனவானது முழுமையாக மேற்கொள்ளப்பட்டிருக்குமெனில், எந்தவொரு வட்டியும் விதிக்கப்படமாட்டாது.

12.6. இவ்வாறாக கணக்குக் கூற்றில் காட்டப்படுகின்ற தொகையின் முழுக்கொடுப்பனவினை மேற்கொள்ளும் அட்டைதாரர் அவரது கொடுக்கல்வாங்கலுக்கான (காசு முற்பணம் அல்லாத) வட்டியை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றார்.

12.7. காசு முற்பணங்கள் மீதான வட்டியானது பணம்மீளப்பெறப்பட்ட திகதியிலிருந்து முழுமையாக தீர்ப்பனவாக்கப்படும் திகதி வரையில் விதிக்கப்படும்.

12.8. குறைந்தபட்ச தொகை வருமதியானது கொடுப்பனவு வருமதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேற்கொள்ளப்படாவிட்டால், அட்டைதாரர் வட்டிக்கு மேலதிகமாக காலத்திற்கு காலம் காணப்படும் காலந்தாழ்ந்த கொடுப்பனவு கட்டணத்தையும் செலுத்தவேண்டிய பொறுப்புக்குள்ளாவார்.

12.9. செல்லுபடியாகும் சந்தர்ப்பங்களில் வங்கியினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் வீதத்தில் விதிப்பனவு மற்றும் கட்டணங்களை வங்கிக்கு செலுத்த அட்டைதாரர் உடன்படுகின்றார்.

12.10. அட்டைதாரர் கொடுப்பனவு வருமதித் திகதியில் தற்போதைய மிகுதியை தீர்வாக்காதுவிடின், நாளாந்த அடிப்படையில் கணிக்கப்படும் நிதிசார் விதிப்பனவானது அட்டைக் கணக்கில் கொடுப்பனவுகள் வரவுவைக்கப்படும் வரையிலும் அதற்குப் பின்னராக குறைக்கப்பட்ட மிகுதிகளும் தற்போதைய மிகுதியில் சேர்க்கப்படும்.

12.11. அட்டைதாரரிடமிருந்து வங்கியினால் பெறப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் பின்வரும் ஒழுங்கில் அல்லது வங்கி தக்கதெனக் கருதும் அத்தகைய முன்னுரிமை ஒழுங்கில் பிரயோகிக்கப்படும்

12.11.1 அனைத்து செலுத்தப்படாத நிதி விதிப்பனவுகள், சேவை விதிப்பனவுகள், கட்டணங்கள், காசு முற்பணங்கள் மற்றும் முந்தைய கணக்குக் கூற்றில் காட்டப்பட்ட ஏதேனும் ஏனைய செலவுகள்

12.11.2 அனைத்து செலுத்தப்படாத நிதி விதிப்பனவுகள், சேவை விதிப்பனவுகள், கட்டணங்கள், காசு முற்பணங்கள், மற்றும் தற்போதைய கணக்குக் கூற்றில் காட்டப்படும் ஏதேனும் ஏனைய செலவுகள்

12.11.3 ஏதேனும் முந்தையக் கணக்குக் கூற்றில் காட்டப்படுகின்றவாறு அனைத்து

செலுத்தப்படாத அட்டை கொடுக்கல்வாங்கல் மற்றும் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்

12.11.4 தற்போதைய கணக்குக் கூற்றில் காட்டப்படுகின்றவாறு அனைத்து செலுத்தப்படாத அட்டை கொடுக்கல்வாங்கல் மற்றும் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்

12.11.5 அனைத்து நிதி விதிப்பனவுகள், சேவை விதிப்பனவுகள், கட்டணங்கள், காசு முற்பணங்கள் மற்றும் தற்போதைய கணக்குக் கூற்றில் காட்டப்படாத ஏனைய செலவுகள் மற்றும் அட்டைக கொடுக்கல்வாங்கல்கள்

12.12. வருடாந்த கட்டணங்கள், கையாளல் விதிப்பனவுகள், மேலதிக விதிப்பனவுகள், நிதிசார் விதிப்பனவுகள், குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ட தொகை வருமதி மற்றும்/அல்லது காலந்தாழ்ந்த கொடுப்பனவு விதிப்பனவுகள் அல்லது வேறேதேனும் விதிப்பனவுகளது வீத முறை அல்லது கணிப்பீடு என்பவற்றை மாற்றுவதற்கான முழுமையான தற்றுணிவு வங்கிக்கு உரித்துடையதாகும்.

12.13. வங்கியினால் விதந்துரைக்கப்பட்டவாறான மீளிடமாற்றல் விதிப்பனவொன்றானது மீளிடமாற்றப்பட்ட அட்டையொன்றை விநியோகிக்க வங்கிக்கு கோரிக்கை விதிக்கப்பட்ட உடனே வங்கிக்கு அட்டைதாரரினால் செலுத்தப்படுதல் வேண்டியதாகும்.

12.14. எந்நேரத்திலும் பொருத்தமான சட்ட நடவடிக்கையொன்றை எடுப்பதற்கான வங்கியின் உரிமைக்கு பங்கமின்றி, வெளிநிற்கும் தொகையின் முழு அல்லது பகுதியளவான கொடுப்பனவில் அட்டைதாரரினால் வரையப்பெற்ற ஏதேனும் மீளும் காசோலைக்கான கட்டணத்தை விதிக்கலாம்.

12.15. அட்டைக் கணக்கின்கீழ் எந்நேரத்திலும் வங்கிக்கு அட்டைதாரரிடமிருந்து வருமதியாகக்கூடியவாறு ஏதேனும் தொகை காணப்பட்டால், அல்லது ஏதேனும் முறையில் அல்லது அத்தகைய கணக்குகளின் ஏற்பாடுகளில் அட்டைதாரரினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் தவறுகை அல்லது அட்டைதாரருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட வேறேதேனும் வங்கி வசதிகளில், ஏதேனும் வங்கிக் கணக்கு, அல்லது வேறேதேனும் கணக்கு, நடைமுறை அல்லது வேறுவகையிலானவற்றின்மீது அட்டைதாரர் வங்கிக்கு பொறுப்புடையவராகின், அதன்போதும் மற்றும் அத்தகைய நிகழ்விலும், அட்டைக் கணக்கு (கணக்குகளில்) காணப்படும் ஒட்டுமொத்த வெளிநிற்கும் மிகுதிகளும் உடனடியாக வருமதியாக செலுத்தப்படவும் வேண்டும் என்பதுடன் இதனகத்தான 18 ஆம் உறுப்புரை (முடிவுறுத்தல்) செல்லுபடியாதாதலும் வேண்டும்.

12.16. அட்டைக் கணக்கின் மிகுதியை குறிப்பிட்டு, வங்கியின் உத்தியோகத்தர் ஒருவரினால் கை-யொப்பமிடப்பட்ட சான்றிதழொன்று, சான்றிதழ் வழங்கப்பட்ட தினத்தில் வங்கிக்கு அட்டைதாரரின் பொறுப்பினது முதற்தோற்ற சாட்சியமாகக் காணப்படுதல் வேண்டும்.

12.17. எந்தவொரு வைப்பும் அதனை அட்டை கணக்குக்கு பற்றுவைத்தால் மாத்திரமே வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்டதாக கருத்திற்கொள்ளப்படும்.

12.18. பணசேகரிப்பிற்கு காசோலை வைப்பு ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் அத்துடன் காசோலை தடைநீக்கப்பட்டு வரும்படிகள் வங்கிக்கு செலுத்தப்படும் வரையில் வரும்படிகள் கிடைக்கப்பெறமாட்டாது. வங்கியின் காசோலை வைப்புப் பெட்டிகளில் இடப்படும் காசோலை வைப்புகள் அடுத்துவரும் வேலைநாளில் சேகரிக்கப்படும்.

12.19. அட்டைதாரர் கொடுப்பனவு வருமதித் திகதியில் அட்டை கணக்குக்கு அட்டைதாரரின் வெளிநிற்கும் கடனட்டை கூற்றுத் தொகையின் சதவீதமொன்றை கொடுப்பனவாக்குவதற்கு அட்டைதாரரின் வங்கியுடனான நடைமுறை அல்லது சேமிப்பு கணக்குக்கு நேரடி கடன் நிலையியல் அறிவுறுத்தல் வழங்கலாம். அத்தகைய ஏதேனும் நிலையியல் அறிவுறுத்தலிலான ஏதேனும் திருத்தம் மற்றும் இரத்துச்செய்தலானது அடுத்த கொடுப்பனவு வருமதித் திகதிக்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக வங்கியை அடைதல் வேண்டும் என்பதற்கு அட்டைதாரர் உடன்படுகின்றார்.

12.20. வங்கியுடனான நியமிக்கப்பெற்ற தீர்ப்பனவு கணக்குக்கு வழங்கப்பட்ட நேரடி கடன் நிலையியல் அறிவுறுத்தலிற்கு, பின்வரும் மேலதிக நியதிகளும் நிபந்தனைகளும் செல்லுபடியாகும்.

I. வழங்கப்பட்ட காசோலை அல்லது வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட வேறேதேனும் ஒழுங்கேற்பாடுகளுக்கு எதிராக ஏதேனும் அத்தகைய நிலையியல் அறிவுறுத்தல்களுக்கான முன்னுரிமையை தீர்மானிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது என்பதற்கு அட்டைதாரர் உடன்படுகின்றார்.

II. கொடுப்பனவு வருமதியாகின்ற திகதிக்கு முந்தைய தினத்தில், நிலையியல் அறிவுறுத்தல்களை பூர்த்திசெய்யும் முகமாக பெயர்குறிக்கப்பட்ட தீர்ப்பனவு கணக்கில் போதுமான நிதிகளை வழங்க அட்டைதாரர் உடன்படுகின்றார். தீர்ப்பனவு கணக்கில் போதுமான நிதியில்லாத சந்தர்ப்பத்தில், நிலையியல் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொடுப்பனவுத் தொகையினை மீளப்பெற காலத்திற்கு காலம் மிகைவரைவுகளை வங்கி தன்னுடைய தற்றுணிபின்பேரில் வழங்கலாம். அட்டைதாரர் அனைத்து வெளிநிற்கும் தொகைகளையும் அனைத்து தொடர்புடைய விதிப்பனவுகள், கட்டணங்கள், அதன்பொருட்டு உறப்பட்ட நிதிசார் கட்டணங்கள் உள்ளடங்கலான தீர்வைகளுடன் காலத்திற்கு காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்ற வீதத்தில் கேள்வியின்பேரில் மீளச்செலுத்த

கடப்பாடுடையவராவார்.

III. நிதிக்கூற்றுத் திகதி மற்றும் கொடுப்பனவு வருமதித் திகதிகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து இடைக்கால கொடுப்பனவுகளும் வங்கியுடன் பெயர்குறிக்கப்பட்ட தீர்வைக் கணக்குக்கு வழங்கப்பட்ட நேரடி நிலையியல் அறிவுறுத்தல்களை கணக்கிடுவதில் கருத்திற்கொள்ளப்படமாட்டாது என்பதற்கு அட்டைதாரர் உடன்படுகின்றார்.

IV. நிலையியல் கட்டளை அறிவுறுத்தல்களை முன்னெடுப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட தீர்வைக் கணக்கினில் போதுமான நிதியில்லையெனில், வங்கி – பகுதியளவான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அல்லது மீளப்பெறப்பட்டிருப்பினும்- தன்னியக்க இரத்துக் கட்டணம் ரூ.250 இனை விதிக்கலாம். சொல்லப்பட்ட கட்டணமானது வங்கியின் தற்றுணிபின்பேரில் காலத்திற்கு காலம் மாறுபடலாம். அட்டைதாரரினால் இடப்பட்ட நிலையியல் அறிவுறுத்தல்களை தொடரச்சியாகப் பூர்த்திசெய்வதற்கு பெயர்குறித்தளிக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி இல்லையெனில், அத்தகைய நிலையியல் அறிவுறுத்தல்கள் செயலிழக்கச்செய்யப்படும்.

12.21. சாதாரண வியாபார நோக்கில் வங்கியினால் உண்மையில் கொடுப்பனவுகள் பெறப்பட்ட தினத்திலிருந்தே கொடுப்பனவுகள் கவனத்திற்கொள்ளப்படும்.

12.22. அட்டைதாரரினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் அட்டைக் கணக்கின் விலைப்பற்றுச்சிட்டையிடல் நாணயத்தினில் காணப்படுதல் வேண்டும். கொடுப்பனவு வேறேதேனும் நாணயத்தினில் மேற்கொள்ளப்பட்டால், அத்தகைய கொடுப்பனவை விலைப்பற்றுச்சிட்டையிடல் நாணயத்திற்கு மாற்றுவதில் வங்கிக்கு விதிக்கப்பட்ட அல்லது உறப்பட்ட அனைத்து பரிவர்த்தனை, தரகுப்பணம் மற்றும் ஏனைய விதிப்பனவுகள் அல்லது நட்டங்களை அட்டைதாரர் வங்கிக்கு செலுத்தவேண்டும். அத்தகைய நாணயமற்றல்கள் அட்டை கணக்கிற்குள் உள்ளிடப்படும் தினத்தில் வங்கியினால் தக்கதாக தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய நாணயமாற்று வீதங்களில் நிறைவேற்றப்படும். அட்டைக் கணக்கின் விலைப்பற்றுச்சிட்டையிடல் நாணயத்தில் அட்டைதாரரினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கொடுப்பனவானது அட்டைக் கணக்கிற்குள் வங்கி நிதிகளை பதிவிடும் தினத்தில் மாத்திரமே அட்டைக் கணக்கில் பற்றுவைக்கப்படும் மற்றும் விலைப்பற்றுச்சிட்டையிடல் நாணயமல்லாத வேறேதேனும் நாணயத்தில் கொடுப்பனவு பெறப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கொடுப்பனவானது விலைப்பற்றுச்சிட்டையிடல் நாணயத்திற்கு அத்தகைய கொடுப்பனவு மாற்றப்பட்ட அல்லது வங்கியினால் பெறுமதிக்காக தொடர்புடைய நிதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அட்டைக் கணக்கிற்கு பதிவிடப்படும் தினத்திற்குப் பின்னரே பற்றுவைக்கப்படும்.

12.23. அட்டைதாரர் இவ்வுடன்படிக்கையின்கீழ் வருமதியாகவுள்ள அனைத்து தொகைகளையும், கழித்தல் அல்லது நிறுத்திவைத்தலானது சட்டத்தினால் கோரப்பட்டாலன்றி, ஏதேனும் கழித்தல் அல்லது நிறுத்திவைத்தலின்றி (எதிரீடு, எதிர்க்கோரல், வரிகள், விதிப்பனவுகள் அல்லது ஏனையவை எவையாயினும்) வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். கழித்தல் அல்லது நிறுத்திவைத்தலானது சட்டத்தினால் கோரப்படின், அத்தகைய கழித்தல் அல்லது நிறுத்திவைத்தலின்றி வங்கி பெற்றிருக்கக்கூடிய முழுத் தொகைக்கு சமமான தொகையொன்றை வங்கி பெறுமாறு அட்டைதாரர் உடனடியாக வங்கிக்கு மேலதிகத் தொகையொன்றை செலுத்தவேண்டும்; மற்றும் அவ்வாறு கழிக்கப்பட்ட அல்லது நிறுத்திவைக்கப்பட்ட அனைத்து தொகைகளுக்குமாக பங்கேற்றுள்ள தொடர்புடைய அதிகாரசபையின் உத்தியோகப்பூர்வ பற்றுச்சீட்டை அட்டைதாரர் வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

12.24. உடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளுக்கு பங்கமின்றி, அட்டைதாரர் ஒரு மாதத்திற்கு மேலான காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாதிருப்பாராயின், அட்டைதாரர் அட்டைக் கணக்கினை தீர்ப்பனவாக்குவதற்கு தெளிவானதும் குறித்துரைக்கப்பட்டதுமான அறிவுறுத்தல்களை வழங்குதல்வேண்டும் என்பதுடன் அவரது வெளியேற்றத்திற்கு முன்னதாக வங்கியின் அழைப்பு மையத்திற்கு அத்தனை அறிவுறுத்தல்களை அறிவுத்தவும் வேண்டும். அட்டைதாரரினால் கிரமமாக அறிவிக்கப்படாவிடின் வங்கி அதனது சொந்த தற்றுணிபினில் அட்டையை இரத்துச்செய்ய உரிமையுடையதாகும்.

12.25. அட்டைதாரர் பயணம் மேற்கொள்ளின் அல்லது நகரத்திற்கு வெளியில் காணப்படின், கொடுப்பனவு வருமதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக வங்கிக்கு குறைந்தபட்ச தொகை வருமதியேனும் குறைந்தபட்சம் செலுத்துப்பட்டுள்ளது என்பதனை உறுதிசெய்யவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டியது அட்டைதாரரின் கடமையாகக் காணப்படும்

12.26. தாபனத்தின் உறுப்பினரிடமிருந்து முறையாக விநியோகிக்கப்பட்ட கடன் வவுச்சர்களை பெற்றுக்கொண்டதன்பேரில் மாத்திரமே ஏதேனும் பணம்மீளவழங்கல் தொகையினை அட்டைக் கணக்கில் வங்கி பற்றுவைக்கும்.

### 11.3 (ஆ) தவணைக் கொடுப்பனவுகள்

12.27. அட்டைதாரர் பொருட்கள் அல்லது சேவைகளை தவணையில் கொள்வனவு செய்ய தீரமானிக்கும் சந்தர்ப்பங்களில், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளது திரளும் பெறுமதிக்காக அட்டையிலுள்ள கிடைப்பனவாகும் கடனானது நிறுத்திவைக்கப்படும்.

12.28. அட்டைதாரர் பொருட்கள் மற்றும் சேவைகளை தவணையில் கொள்வனவுசெய்ய அல்லது மீளவரும் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள அட்டையை பயன்படுத்தினால், அவை வருமதியாகின்றபோது, எவ்வாறாயினும் எஞ்சிய மிகுதி அதனை அனுமதிக்கையில், அட்டைதாரருக்காக அத்தகைய தவணைகளை செலுத்த அட்டைதாரர் வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றார் என்பதுடன் வருமதியாகின்ற போது அட்டைக் கணக்குக்கு ஒவ்வொரு தவணைகளுக்குமான கொடுப்பனவுகளை செலுத்த அட்டைதாரர் உடன்படுகின்றார்.

12.29. அட்டையைப் பயன்படுத்துவதற்கான அட்டைதாரரின் உரிமை இடைநிறுத்தப்பட்டால் அல்லது அட்டைக் கணக்கு முடிவுறுத்தப்பட்டால், வங்கி அதனது தெரிவிலும் அதனது உரிமைகள் மற்றும் இழப்பீடுகளுக்கு எந்தவொரு பங்கமுமின்றியும், உடனடியாக அட்டைதாரருக்கு எஞ்சியிருக்கும் தவணைகளது திரண்ட தொகை விலைப்பற்றுச்சிட்டையிடலாம்.

12.30. அத்தகைய தவணை கொடுப்பனவு திட்டத்தினை ஆளும் வேறேதேனும் விசேட நியதிகள் மற்றும் நிபந்தினைகளினால் பிணைக்கப்படவும் அட்டைதாரர் உடன்படுகின்றார். இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் தேவைக்கருதி விரிவாக்கப்பட்ட அத்தகைய விசேட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிடையிலான ஏதேனும் முரண் நிகழும்போது, அட்டைதாரர் அந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழு வலுவினையும் அளித்தல் வேண்டும்.

### 13. நிலையியல் ஒழுங்குவிதிகள்

13.1. அட்டைதாரர் இலங்கை மத்திய வங்கி அல்லது அதனையொத்த ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் காலத்திற்கு காலம் விநியோகிக்கப்படும் அனைத்து ஒழுங்குவிதிகளுடனும் இணங்குவதற்கு உடன்படுகின்றார், அத்துடன் நடைமுறையில் இருக்கும் அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியுடன் இணங்காமை அல்லது மீறுகையின் விளைவாக வங்கியினால் உறப்பட்ட ஏதேனும் நட்டம், கோரல் அல்லது செலவீனத்திற்காக வங்கியை ஈட்டுறுதியும்படுத்துகின்றார்.

13.2. அட்டைதாரர் அட்டையினை மூலதன கொடுக்கல்வாங்கல் மற்றும் வர்த்தக கொள்வனவுகளில் நுகர்வுப் பொருட்களது கொள்வனவு/இறக்குமதிக்காக பயன்படுத்தக்கூடாது.

13.3. இலத்திரனியல் நிதிகள் பரிமாற்றம் அல்லது வெளிநாட்டு நாணயங்களில் ATM களிலிருந்து

பணத்தினை மீளப்பெறுதலை தேவைப்படுத்தும் சந்தர்ப்பங்களில், அட்டையின் பயன்பாடானது வெளிநாட்டு செலாவணி திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாகக் காணப்படும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்கானதாக மாத்திரம் காணப்படுதலும் வேண்டும்.

13.4. அட்டைதாரர் குடியகலும்போது, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையிலிருந்து வெளியேறும்போது அல்லது வெளிநாட்டு செலாவணி சட்டம் அல்லது அதன்கீழ் பயனுறும்வகையில் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிகளில் வழங்கப்படும் வரைவிலக்கணங்களின் பிரகாரம் ' வதிவிடமல்லாதோர்' எனக் கருதப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அட்டைதாரர் அட்டையை (அட்டைகளை) வங்கியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

13.5. வங்கி வெளிநாட்டு செலாவணி பணிப்பாளர் அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் காலத்திற்கு காலம் விதந்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் என்பதுடன் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசில் காணப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை தொடர்புடைய அதிகாரசபைகளுக்கும் வெளிப்படுத்தும்.

13.6. வங்கியினது சுயஇசைவின்பேரில் அவ்வாறு இரத்துசெய்கின்ற நேரத்தில் பயனுறுப்பெற்றுக் காணப்படும் வெளிநாட்டு செலாவணி சட்டம்/வேறேதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதிகள் அல்லது வேறேதேனும் நிலையியல் ஒழுங்குவிதிகளின் மீறுகையொன்று இடம்பெற்றுள்ளது என நம்புவதற்கு வங்கியிடம் ஏதேனும் காரணங்கள் காணப்படுகின்றபோது அட்டைதாரருக்கு அறிவிக்காமல் அட்டையை இரத்துசெய்யலாம்.

**14. மீட்டல்**

வங்கி எந்நேரத்திலும் மற்றும் முன்னறிவித்தலோ பொறுப்போ இன்றியும், வங்கியுடன் காணப்படும் அட்டைதாரரின் ஏதேனும் கணக்கில்/கணக்குகளின் பற்றில் நிற்கும் எவையேனும் பணங்களை அட்டை கணக்கின் மீது வங்கிக்கு வருமதியாகவுள்ள தொகையினை விடுவிப்பதனை நோக்கி எதிரிடலாம் அல்லது மாற்றலாம்.

**15. அட்டையின் செல்லுபடியாந்தன்மை, காலாவதி மற்றும் புதுப்பித்தல்**

15.1. அனைத்து அட்டைகளும் பொதுவில் ஐந்து ஆண்டுகள் செல்லுபடியாகும் காலப்பகுதிக்கு வழங்கப்படும். அட்டைதாரர் நியதிகளையும் நிபந்தனைகளையும் மீறாதவிடத்து, அட்டையின் செல்லுபடியாந்தன்மையானது அட்டையில் காணப்படும் காலாவதித் திகதியில் காலாவதியாகும், வங்கி அட்டையின் (மற்றும் அதன்பாலான துணைநில் அட்டையினதும்) செல்லுபடியாந்தன்மையினை தன்னியக்கமாக புதுப்பித்து உளதாயிருக்கும் அட்டையின் காலாவதிக்கு 15 நாட்களுக்கு முன்னதாக புதிய அட்டையை (அட்டைகளை) விநியோகிக்கும். குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு முன்னதாக புதுப்பிக்கப்பட்ட அட்டை (அட்டைகள்) கிடைக்கப்பெறாதுவிடின், அட்டைதாரர் அழைப்பு மையத்தினை தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்.

15.2. ஒரு மாதம் அல்லது அதற்கு மேலாக ஏதேனும் கொடுப்பனவுகளை நிலுவையில் கொண்டிராத அனைத்து அட்டைகளும், தன்னியக்கமாக புதுப்பிக்கப்படும். அட்டைதாரர் தன்னுடைய அட்டை அல்லது ஏதேனும் துணைநில் அட்டையை புதுப்பிக்கவிரும்பாத விரும்பாத சந்தர்ப்பத்தில், எழுத்துமூல அறிவிப்பொன்று அழைப்பு மையத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். புதுப்பித்தல் கட்டணமொன்று (புதுப்பிக்கும் நேரத்தில் செல்லுபடியாகுமாறு) விதிக்கப்படும் என்பதுடன் அது மீளவழங்கப்படவுமாட்டாது.

15.3. அட்டைதாரர் காலாவதித் திகதிக்குப் பின்னராக தன்னுடைய அட்டையை பயன்படுத்த முயற்சித்தலாகாது. காலாவதித் திகதிக்கு பின்னரான அட்டையைப் பயன்படுத்தும் முயற்சியினால் எழக்கூடிய ஏதேனும் பின்விளைவுகளுக்கு, வங்கி எதுவாயினுமொரு முறைமையில் பொறுப்பாகமாட்டாது.

**16. வர்த்தகருடனான அட்டைதாரரின் பிணக்குகள்**

16.1. எவையேனும் வர்த்தகத் தாபனம்/நிதிசார் நிறுவனத்துக்கு எதிரான ஏதேனும் பிணக்கு அல்லது முறைப்பாடானது அத்தகைய வர்த்தக/நிதிசார் நிறுவனத்துடன் அட்டைதாரரினால் நேரடியாக தீர்த்துக்கொள்ளப்படவேண்டும். ஏதேனும் வர்த்தக/நிதி நிறுவனத்திடமிருந்து அட்டைதாரர் அல்லது துணைநில் அட்டைதாரரினால் (அட்டைதாரர்களினால்) பெறப்படுகின்ற ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளது தரம் அல்லது பெறுமதிக்கு எம்முறையிலும் வங்கி பொறுப்பாகமாட்டாது.

**17. பிணக்குகளும் தீர்வுகளும்**

17.1. கணக்குக் கூற்றினில் தவறொன்று இடம்பெற்றுள்ளது என அட்டைதாரர் நம்பினால், அவர் வங்கியை உடனடியாகத் தொடர்புகொள்ளுதல் வேண்டும்.

17.2. அட்டைதாரர் வாய்மொழி மூலமாக அறிவிப்பாராயின், 5 வியாபார நாட்களுக்குள் அவரது முறைப்பாட்டினை எழுத்துமூலமாக அனுப்புமாறும் வேண்டப்படுவார். வங்கிக்கு மேலதிக தகவல்கள் கட்டாயமாகத் தேவையேற்படும் அவசியமான சந்தர்ப்பங்களில் அட்டைதாரரை வங்கி தொடர்புகொள்ளும்.

17.3. வங்கியின் விசாரணைகள் மற்றும் திருத்தங்கள் (ஏதேனும் காணப்படின்) நிலுவையிலிருக்கையில், வங்கியானது, அதனது முழுமையான தற்றுணிவினில், பிணக்கு தீர்க்கப்படும் வரையில் பிணக்கிற்குட்பட்டத் தொகையினை கணக்கில் பற்றிடலாம். விசாரணைகள் முடிவடைந்ததன்பேரில், வங்கி எத்தவறும் இடம்பெறவில்லையென முடிவுறுத்தினால்; வங்கி அதற்கிணங்க அட்டைதாரருக்கு உடனடியாக ஆலோசனை வழங்கும். அட்டைதாரர் கணக்கானது அதற்கிணங்க உறப்பட்ட பெறுமதித் திகதி மற்றும் சேவைக் கட்டணங்களுடன் பிணக்கிற்குட்பட்டத் தொகையினை வரவ-ிடப்படும். அட்டைதாரரின் கேள்வி தொடர்பான விசாரணை செயன்முறையில், வங்கி வவுச்சர் பிர-திகள் முதலானவற்றை அதனது சேமிப்பகத்திலிருந்தோ அல்லது ஏனைய வங்கி ஊடாகவே மீளப்பெறுதல் வேண்டும் என்பதுடன், பொருத்தமானவாறு அட்டைதாரர் கணக்கில் மீளப்பெறப்பட்டத் தொகை வரவிடப்படும்.

17.4. தேவையான விபரங்கள் /தகவல்களை வழங்கி அட்டைதாரர் விசாரணைக்கு உதவ வேண்டும்.

17.5. அட்டைதாரர் ஏதேனும் கொடுக்கல்வாங்கல் /கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பிணக்குறின், வங்கி அத்தகைய பிணக்குகளை விசாரிக்கும். எனினும் அட்டைதாரர் விசாரணைக் காரணங்களுக்காக ஏதேனும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்பாவிடின் அல்லது விசாரணைக்கு உதவ வங்கிக்கு வருகைதர விரும்பாவிடின் அல்லது சிசிரிவி மற்றும் ஏனைய சான்றுகளை அவதானிக்க விரும்பாவிட்டால் அல்லது வர்த்தக நிலையங்கள் அல்லது ATMகளுக்கு செல்ல விரும்பவில்லையெனில் பிணக்கிற்குட்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்கும் அட்டைதாரரே பொறுப்பானவராகுவார்.

**18. முடிவுறுத்துல்**

18.1. மேலே 12 ஆம் சரத்தின்கீழ் (கொடுப்பனவு மற்றும் விதிப்பனவுகள்) குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு ஏற்பாடுகள் எதுஎவ்வாறாயினும், அட்டையின் பயன்பாட்டினால் உறப்பட்டதும் ஆயினும்

அட்டைதாரரின் கணக்கில் விதிக்கப்படாததுமான தொகையுடன் அட்டைக் கணக்கில் (அனைத்து துணைநில் அட்டைகள் உள்ளடங்கலாக) வெளிநிற்கும் அனைத்துத் தொகைகளும் வருமதியாகக் காணப்படும் என்பதுடன் இவ்வுடன்படிக்கையினை முடிவுறுத்துவதன்பேரில் உடனடியாக முழு-மையாகக் செலுத்தப்படவும் வேண்டும். இவ்வுடன்படிக்கையின் முடிவுறுத்துகையானது பாதியாக வெட்டப்பட்ட அட்டையுடன் (அட்டைகளுடன்) வங்கிக்கு எழுத்துமூல அறிவித்தலினை வழங்குவதனால் அட்டைதாரரினாலோ அல்லது அட்டைதாரரின் இறப்பு, வங்குரோத்து அல்லது கடனிறுவகையின்மை அல்லது வங்கியினால் பண்புறுத்தமுடியாத ஏதேனும் காரணத்தினால் வங்கிக்கு அட்டைதாரரின் இருப்பிடம் அறியப்படாதிருப்பதன் பேரில் வங்கியினாலோ மேற்கொள்ளப்படலாம். அட்டைதாரர் மற்றும்/அல்லது மரணச்சொத்துதத்துவகாரர்கள் அட்டைக் கணக்கில் காணப்படும் வெளிநிற்கும் நிலுவைகளை முழுமையாக மீளச்செலுத்தவதற்கு பொறுப்பாகக் காணப்படுவார்கள் என்பதுடன் அத்தகைய வெளிநிற்கும் மிகுதிகைள மீளஅறவ-ிடுவதில் உறப்பட்ட அனைத்து செலவுகள் (சட்டக் கட்டணம் மற்றும் விதிப்பனவுகள் உள்ளடங்கலாக) மற்றும் செலவீனங்களிலிருந்து வங்கியை நட்டோத்தரவாதப்படுத்தலும் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகளின் நிலுவைகளில், வங்கி அதன் உளதாயிருக்கும் வீதத்தில் தொடர்ச்சியாக வட்டி மற்றும் ஏனைய விதிப்பனவுகளை விதிக்க உரித்துடையதாகும்.

18.2. முதன்மை அட்டைதாரர் அவரது அட்டையை முடிவுறுத்தும் சந்தர்ப்பத்தில், அத்தகைய முதன்மை அட்டைதாரர் மற்றும் துணைநில் அட்டைதாரர் (அட்டைதாரர்கள்) (எவரேனுமிருப்பின்) அனைத்து வெளிநிற்றல்களும் தீர்க்கப்படும் மற்றும் அனைத்து அட்டைகளும் வங்கிக்கு முறையாக பாதியாக வெட்டப்பட்டு மீளவழங்கப்படும் அத்தகைய காலம் வரையில் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க அனைத்து விதிப்பனவு மற்றும் ஏனைய பொறுப்புக்களுக்காக வங்கிக்கு கூட்டாகவும் கடுமையாகவும் தொடர்ந்தும் பொறுப்புடையவர்களாவார்கள்.

18.3. வங்கி முற்கூட்டிய அறிவித்தலினை வழங்கியோ வழங்காமலோ மற்றும் காரணத்துடனோ அல்லது காரணமின்றியோ இரத்துசெய்வதன் மூலம் அல்லது புதுப்பிக்க மறுப்பதன் மூலம் இவ்வுடன்படிக்கையை எந்நேரத்திலும் முடிவுறுத்தலாம். அத்தகைய முடிவுறுத்தல் இடம்பெறாவிடின் அல்லது இடம்பெறாதவரையில் வங்கி அட்டைதாரருக்கு (அட்டைதாரர்களுக்கு) புதிய அட்டையை (புதுப்பிக்கப்பட்ட அட்டையை) வழங்கலாம்.

18.4. அட்டைக் கணக்கின் முடிவுறுத்தலினால் வருடாந்த கட்டணத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தினை மீளவழங்க வங்கி பொறுப்புடையதாகக் காணப்படமாட்டாது.

18.5. அட்டையை விநியோகிப்பதற்கான ஈடாக வங்கியில் ஏதேனும் பிணையமொன்று வைத்திருக்கப்படும்போது வங்கியினால் அட்டை இரத்துச்செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அட்டையின் வெளிநிற்றல்களது முழுமையான தீர்ப்பனவின் பேரில் அத்தகைய பிணையத்தினை வங்கி விடுவிக்கும்.

18.6. எத்திறத்தவரினாலுமான இவ்வுடன்படிக்கையின் முடிவுறுத்தல் எவ்வாறாயினும், அட்டையினைப் பயன்படுத்துவதனால் உறப்பட்ட அனைத்து மேலதிக விதிப்பனவுகளுக்கும் அட்டைதாரர் தொடர்ந்தும் பொறுப்பானவராகக் காணப்படுவார்.

**19. பொறுப்புக்களின் புறநீங்கல்**

19.1 வங்கி பின்வருவனற்றிற்கு அப்பால் நேரடியாகவோ மறைமுகமாகவோ எழுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் அட்டைதாரருக்கு எவ்வகையிலேனுமான பொறுப்பொன்றின்கீழ் காணப்படுதலாகாது:

19.1.1 வங்கி அல்லது வர்த்தகர் அல்லது ஏனைய வங்கி அல்லது நிதிசார் நிறுவனம் அல்லது ஏதேனும் ATM அல்லது வேறு திறத்தவர் அட்டை கொடுக்கல்வாங்கலை மறுக்கின்ற அல்லது கடன் எல்லைக்கு மேலதிகமாக அல்லது எல்லாமாக காசு முற்பணத்தினை நீட்டிக்க அல்லது வழங்க மறுக்கின்ற காரணத்தினால் அட்டைதாரருக்கு எவ்வாறாயினும் உறப்பட்ட அல்லது வருந்திய ஏதேனும் இழப்பு அல்லது சேதம்;

19.1.2 ஏதேனும் வர்த்தகரினால் அட்டைதாரருக்கு விநியோகிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் ஏதேனும் குறைவுற்ற அல்லது பற்றாக்குறைக்காக அட்டையை மதிக்க அல்லது ஏற்க எவரேனும் வர்த்தகர் அல்லது ஏதேனும் கொடுப்பனவு ஒழுங்கமைப்பின் உறுப்பு நிறுவனத்தின் மறுப்பு அல்லது செல்லுபடியாகுமிடத்தினில், அட்டை கொடுக்கல்வாங்கல் வர்த்தகரினால் ஏதேனும் மீறல் அல்லது செயற்படுத்தாமை.

19.1.3 ஏதேனும் ATM/POS இன் செயற்கோளாறு அல்லது இடைநிறுத்தல் மற்றும் /அல்லது தொடர்பாடல் முறைமையின் தோல்வி;

19.1.4 அதனது முகப்பினில் பொறிக்கப்பட்டுள்ள காலாவதித் திகதிக்கு முன்னதாக அட்டையை கோர மற்றும் கொள்முதல் செய்து சமர்ப்பிப்பதற்கான, அத்தகைய கோரல் மற்றும் சமர்ப்பணமானது வங்கியினாலோ அல்லது வேறு எவரேனும் நபரினாலோ அல்லது ATM/POS இனாலோ மேற்கொள்ளப்பட்டதோவாயினும், அதனது உரிமையை பயன்படுத்துதல்

19.1.5 18 ஆம் சரத்தினை (முடிவறுத்தல்) பின்பற்றி ஏதேனும் அட்டையை அல்லது அட்டைக் கணக்கினை முடிவுறுத்துவதற்கான அதனது உரிமையை வங்கி பயன்படுத்துதல்;

19.1.6 அட்டையை வழங்குவதற்Оகே அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ ஏதேனும் நபருக்கான அதனது மீளளித்தல் அல்லது மறுத்தலுக்கான ஏதேனும் கோரிக்கையில், அட்டையின் மீளுடைமையினாலும் அது குறித்தும் அட்டைதாரரின் கடன் பண்பு மற்றும் புகழுக்கான ஏதேனும் ஊறு;

19.1.7 21 ஆம் உறுப்புரையினை (வங்கியின் புத்தகங்கள், பதிவுகள் மற்றும் வாடிக்கையாளர் தகவல்) தொடர்ந்து வங்கியினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் விவரத்திலான ஏதேனும் தவறான கூற்றுகள், தவறான பிரதிநிதித்துவம், தவறு அல்லது விடுபடுகை;

19.1.8 அட்டைதாரருக்கும் எவரேனும் வர்த்தகர் அல்லது வங்கி அல்லது நிதிசார் நிறுவனம் அல்லது எவரேனும் வேறு நபருக்கும் இடையிலாக ஏதேனும் பிணக்கு, அத்துடன் அட்டைதாரர் அத்தகைய வர்த்தகர் அல்லது வங்கி அல்லது நிதிசார் நிறுவனம் அல்லது நபருக்கு எதிராக கொண்டிருக்கக்கூடிய அத்தகைய பிணக்கு அல்லது எதிர்க்கோரல் அல்லது நட்டோத்தரவாத உரிமையினால் வங்கிக்கான அட்டைதாரரின் பொறுப்பானது எவ்வழியிலும் பாதிக்கப்படுதலாகாது.

19.1.9 கடவுளின் சித்தம், போராட்டங்கள், குடிசார் மோதல், எழுச்சிகள், யுத்தங்கள், பெருந்தொற்று அல்லது அதனது கட்டுப்பாட்டுக்கு அப்பாலான வேறேதேனும் காரணங்கள், அல்லது வேலைநிறுத்தங்கள் அல்லது முடக்கங்களினால் அதனது வியாபாரத்திலான இடையூறுகளின் விளைவாக எழுகின்ற பின்விளைவுகள்.

**20. பெருநிறுவன அட்டைகளின் பொறுப்பு**

எவரேனும் அதனது பணியாளர், நிறைவேற்றதிகாரி, பணிப்பாளர் அல்லது பெருநிறுவன அங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறேவரேனும் நபர் தொடர்பில் தகுதிவாய்ந்த பெருநிறுவன அங்கங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து பெறுநிறுவன அட்டைகளும் அத்தகைய பெருநிறுவன அங்கத்தினதும் அதேப்போன்று அட்டைதாரரினதும் கூட்டானதும் மற்றும் கடுமையானதுமான பொறுப்புக்களின்கீழ் செயற்படுத்தப்படும்.

**21. வங்கியின் புத்தகங்கள், பதிவுகள் மற்றும் வாடிக்கையாளர் தகவல்**

21.1. வங்கியின் புத்தகங்கள், பதிவுகள் மற்றும் கணக்குகள் அட்டைதாரர் மீது முடிவானதாகவும் பிணைப்பதாகவும் காணப்படுதல் வேண்டும். வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ், அச்சுப்பிரதி அல்லது கணக்குக் கூற்றானது ஏதேனும் வழக்கு நடவடிக்கைகள் அல்லது ஏனையவற்றுக்கு அதன்பொருட்டான சரியானத்தன்மையில் அட்டைதாரருக்கு எதிரான இறுதியானதும் முடிவானதுமான சான்றாகுதல் வேண்டும்.

21.2. வாடிக்கையாளர் மற்றும் வங்கியின் நலன்களை பாதுகாப்பதற்காக வங்கியினால் அல்லது வங்கிக்கான தொலைபேசி அழைப்புகள் பதிவுசெய்யப்படலாம் என்பதனை அட்டைதாரர் அறிந்து ஏற்றுக்கொள்கின்றார்.

21.3. வங்கி அதனது தரவுகள், தகவல்கள் மற்றும் பதிவுகளை இலத்திரனியல் வடிவம், அல்லது நுண்ஒளிநாடா அல்லது ஏனைய முறைகளில் (செயன்முறைப்படுத்தல் மையங்கள் மற்றும் தரவுத்தளங்கள் உள்ளடங்கலாக) பேணலாம், செயன்முறைப்படுத்தலாம் மற்றும் களஞ்சியப்படுத்தலாம் என்பதனை அட்டைதாரர் இத்தால் அறிந்து ஏற்றுக்கொள்கின்றார், அத்துடன் வங்கியினால் அதனது கோவைகள், புத்தகங்கள், பதிவுகள் அல்லது கணக்குகளிலிருந்து உரைப்பகுதியாக காட்சிப்படுத்தப்படக்கூடிய செய்திகள், தடவழி பெக்சிமைல்கள், நுண்ஒளிநாடாக்கள், கணினி அச்சுப்பிரதிகள் மற்றும் புகைப்படப்பிரதிகளானவை அதன்பொருட்டான உள்ளடக்கங்களின் கண்ணியத்தன்மைக்கான முடிவான சான்றினை கட்டமைக்கும் என்பதற்கும் மேலும் உடன்படுகின்றார்.

21.4. வங்கி மூன்றாம் திறத்து ஒப்பந்ததாரர்களது சேவைகளை பயன்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய மூன்றாம் திறத்து ஒப்பந்ததாரர்கள் அட்டைதாரர் மற்றும் அட்டை கணக்கு உள்ளடங்கலாக வங்கியின் புத்தகங்கள் மற்றும் பதிவுகளுக்கான அணுகலைக் கொண்டிருக்கலாம் என்பதனையும் அட்டைதாரர் அறிந்து உடன்படுகின்றார்.

21.5. வங்கியுடனான அட்டைதாரரின் உறவு விபரங்கள் (வெளிநிற்கும் மிகுதிகள், கணக்கு வரலாறு மற்றும் அட்டைதார் தொடர்புடைய ஏனைய தகவல்கள்) வங்கியின் மற்றொரு கிளை அல்லது அலுவலகத்துக்கு, வங்கியின் ஏதேனும் துணைநிறுவனத்துக்கு அல்லது வங்கியின் எவரேனும் உறுப்பினருக்கு; இலங்கையினதோ அல்லது வேறு நாட்டினதோவான, ஏதேனும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கான நீதிமன்ற உத்தரவுடன் இணங்கியொழுகுவதற்காகவும்; வங்கியின் தகவுடைய ஏதேனும் சாட்டுதல்தாரருக்கு; எவரேனும் உத்தரவாதமளிப்பவர், மூன்றாம் திறத்தவர் அல்லது பிணைய வழங்குநருக்கு; குறிப்பீடுகளுக்கான ஒரு மூன்றாம் திறத்தவரிடமிருந்தான ஏதேனும் கோரிக்கைக்கான பதிலாகவும்; மற்றும் வங்கியின் தொழிற்சார் ஆலோசகர்கள், முகவர்கள் மற்றும் சுயாதீன ஒப்பந்ததாரர்களுக்கும் வங்கியினால் வெளிப்படுத்தப்படுவதற்கும் அறிக்கையிடப்படுவதற்கும் அட்டைதாரர் ஒப்புதலளிக்கின்றார். வாடிக்கையாளர் எவ்வித கோரலையும் கூறுதலாகாது என்பதுடன், அத்தகைய ஏதேனும் வெளிப்படுத்துகை அல்லது அறிக்கையிடலின் விளைவாக துன்புறப்பட்டதாக அல்லது சாட்டப்பெறும் ஏதேனும் இழப்பு, சேதம் அல்லது ஊறுகளுக்காக வங்கிக்கு எதிராக, ஏதேனும் கோரலை கோரும் உரித்தினை இத்தால் விட்டழிக்கின்றார்.

21.6. அட்டைக்கான விண்ணப்பத்தின் கடன் நிலையினை பரிசோதிப்பதற்கும் மற்றும்/அல்லது அவருக்கான அறிவித்தலின்றி வங்கி எந்நேரத்திலும் மற்றும் தோதானதென கருதுகின்றபோதும் அட்டைதாரரின் கடன் நிலையினை பரிசோதிக்கவும் வங்கி உரிமையுடையதாதல் வேண்டும்.

21.7. வாடிக்கையாளர்/வாடிக்கையாளர் வியாபாரம், வங்கி அல்லது வேறு குழும உறுப்பினில் வைத்திருக்கப்படும் கணக்கு அல்லது வங்கியுடனான அல்லது வேறு குழும உறுப்புடனான வாடிக்கையாளர்/வாடிக்கையாளரின் உறவு உள்ளடங்கலாக (மட்டுப்பாடுகளின்றி) அட்டை கணக்குகளை கருத்திற்கொள்ளும் ஏதேனும் தகவலை பின்வருவோரில் எவருக்கேனும் வெளிப்படுத்துவதற்கான (ஏதேனும் நோக்கத்துக்காக) உரிமையை வங்கி மற்றும்/அல்லது அதன் உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் கொண்டுள்ளனர்.

(i) வங்கியின் ஏதேனும் கிளை அல்லது வேறு குழும உறுப்பினர்;

(ii) வங்கி அல்லது வேறு குழும உறுப்பினர் மீதான நியாயாதிக்கத்துடனான ஏதேனும் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை, அரசாங்க அதிகாரபை;

(iii) அத்தகைய வெளிப்படுத்தலை மேற்கொள்ள சட்டம் அல்லது நீதிமன்ற கட்டளையினால் வங்கி கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏவரேனும் ஆள்;

(iv) வங்கிக்கான அந்தரங்க கடமையின்கீழிருக்கும் ஏவரேனும் ஆள்.

## 22. தொலைபேசி, பெக்சிமைல் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்கான அதிகாரமளித்தல் மற்றும் நட்டோத்தரவாதம்.

22.1. அறிவுறுத்தலை வழங்கும் அல்லது வழங்குவதாக கருதப்படும் நபரின் அதிகாரம் அல்லது அடையாளம் மற்றும் அறிவுறுத்தலைப் பெறுகின்ற நேரத்தில் காணப்படும் நிலைமைகளை கருத்திற்கொள்ளாதும் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருப்பனவற்றின் பொதுத்தன்மைக்கு பங்கமின்மைகள் உள்ளடங்கலாக வங்கியின் பாகத்திலான ஏதேனும் விசாரணை இன்றி அட்டைதாரரின் (அட்டைதாரர்களின்) சார்பில் தொலைபேசி, பெக்சிமைல் அல்லது மின்னஞ்சல் வழியாக வழங்கப்படுவதாக கருதப்படுவதும் காலத்திற்கு காலமானதுமாகக்கூடிய ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்தல், கோரல் அல்லது ஏனைய தொடர்பாடல் (‘‘அறிவுறுத்தல்’’) என்பவற்றின் மீது தங்கியிருப்பதற்கும் அதற்கிணங்க செயற்படுவதற்குமாக அட்டைதாரர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளும் மற்றும் வழங்கும் நேரம் மற்றும் திகதியின் மீதான வங்கியின் ஆளுகையை இறுதியானதாக அட்டைதாரர் ஏற்றுக்கொள்கின்றார்.

22.2. வங்கி அறிவுறுத்தல்களை முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டதாகவும் அட்டைதாரரை பிணைப்பதாகவும் கருத்திற்கொள்ள உரித்துடையதாகும் மற்றும் அவ்வறிவுறுத்தலானது பணத்தினை செலுத்துமாறு அல்லது ஏனையவகையில் ஏதேனும் கணக்கினை வரவு வைக்க அல்லது பற்றுவைக்க, அல்லது தொடர்புடையதாக, ஏதேனும் பணம் அல்லது ஆவணங்களது இடமாற்றல், அல்லது ஏதேனும் உடன்படிக்கை அல்லது வங்கியுடனான அல்லது வேறு எவரேனும் நபருடனான வேறு உடன்படிக்கையுடன் அட்டைதாரரை பிணைப்பதாக கருதப்படும் அல்லது ஈடுபட்டுள்ள கொடுக்கல்வாங்கல் அல்லது ஏற்பாடு அல்லது பணத்தொகையின் தன்மையை கருத்திற்கொள்ளாதும் அறிவுறுத்தலின் நியதிகளிலான ஏதேனும் தவறு, இருபடைத்தன்மை, தவறான புரிதல் அல்லது தெளிவுகளின் தேக்கம் எவையாயினும், எவ்வாறாயினுமான வேறு ஏதேனும் வகையான கொடுக்கல்வாங்கல் அல்லது ஏற்பாட்டுடன் அட்டைதாரரை ஈடுபடுத்துவதாயினுஞ்சரி, வங்கி பொருத்தமானதெனக் கருதுகையில் அறிவுறுத்தல்களுடன் தொடர்புடையதாக அல்லது அவற்றின்மீதான நம்பிக்கையின்பேரில் அத்தகைய நடவடிக்கைகளை வங்கி எடுப்பதற்கும்

உரித்துடையதாதல் வேண்டும்.

22.3. இவ்வதிகாரமளித்தல் மற்றும் நட்டோத்தரவாதத்தின் நியதிகளுடன் இணைந்ததாக வங்கி செயற்படுவதனைக் கருத்திற்கொண்டு வங்கியை நட்டோத்தரவாதப்படுத்தவதற்கும் சட்டரீதியாகவோ அல்லது வேறுவகையிலோ ஏதேனும் வகையினதாயினும் அல்லது அறிவுறுத்தல்கள் அல்லது அதன்பொருட்டான ஏதேனும் மீறுகை அல்லது இதனகத்து வழங்கப்பட்ட வங்கியின் அதிகாரத்தினை நடைமுறைப்படுத்துவதில் அல்லது அதனுடன் தொடர்புடையதாக எழுகின்ற ஏதேனுமானதாயினும் வங்கியினால் உறப்பட்ட அல்லது நிலைபேறாக்கப்பட்ட வேறுவகையினதாயினுஞ்சரியான அனைத்து இழப்புகள், கோரல்கள், செயல்கள, வழக்குநடவடிக்கைகள், கோரல்கள், சேதங்கள், செலவுகள், பொறுப்புகள் மற்றும் செலவீனங்களுக்கு எதிராக வங்கி நட்டோத்தரவாதப்படுத்தப்படுவதற்கும் அட்டைதாரர் இத்தால் கைமாற்றமுடியாதளவிற்கு பொறுப்பேற்கின்றார்.

22.4. இவ்வதிகாரமளித்தல் மற்றும் நட்டோத்தரவாதப்படுத்தலின் நியதிகள் அட்டைதாரரிடமிருந்து முடிவுறுத்தல் அறிவித்தலை வங்கி பெறாதவரையிலும் மற்றும் பெறுகின்றவரையிலும் மற்றும் அதன்மீது செயலாற்றுவதற்கு நியாயமான நேரத்தினைக் கொண்டிருக்கும் வரையிலும், அத்தகைய அறிவித்தலைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக இவ்வதிகாரமளித்தல் மற்றும் நட்டோத்தரவாதப்படுத்தலின் நியதிகளுக்கு இணங்க செயற்படுத்தப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் இவ்வதிகாரமளித்தல் மற்றும் நட்டோத்தரவாதமளித்தலின்கீழான ஏதேனும் பொறுப்பிலிருந்து அட்டைதாரரை அம்முடிவுறுத்தல் விடுவிக்காதவரையில், முழு வலுவிலும் பயனுறுதலிலும் காணப்படும்.

22.5. மேற்கூறப்பட்டவாறு தொலைபேசி, பெக்சிமைல் அல்லது மின்னஞ்சல் வழியாக ஏதேனும் அறிவுறுத்தலை வழங்குவதானது வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கான பாதுகாப்பான வழி அல்ல என்பதனையும் அது தொடர்பில் உள்ளாகியுள்ள இடர்களை அட்டைதாரர் அறிந்துள்ளார் என்பதனையும் அட்டைதாரர் ஏற்று அறிந்துக்கொள்கின்றார் அத்துடன் இதனகத்தான ஏற்பாடுகள், அட்டைதாரரின் சௌகரியத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன் அட்டைதாரரின் முற்றான இடரிலும் காணப்படும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றார்.

**23. எதிரீட்டுக்கான உரிமை மற்றும் பிணையமாக வைக்கப்பட்டுள்ள நிதிகள்**

23.1. சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் உடன்படிக்கையின்கீழ் அளிக்கப்படுகின்ற ஏதேனும் எதிரீட்டுக்கான பொது உரிமைகள் அல்லது ஏனைய உரிமைகளுக்கு மேலதிகமாக, வங்கி அதனது முழுமையான தற்றுணிபினில் எந்நேரத்திலும் மற்றும் அறிவித்தலின்றியும் என்ன விளக்கமுடையதாயினும் மற்றும் எங்கு அமைந்திருப்பினும் மற்றும் இலங்கையின் ரூபாயிலோ அல்லது வேறு ஏதேனும் நாணயத்திலோ காணப்படுவதாயினும் வங்கியுடன் அட்டைதாரரினால் வைத்திருக்கப்படும் அனைத்து அல்லது ஏதேனும் கணக்கினை (கணக்குகளை) ஒருங்கிணைக்கலாம் அல்லது திரட்டலாம் அல்லது எதிரிடலாம் அல்லது அத்தகைய ஏதேனும் கணக்கின்கீழ் (கணக்குகளின்கீழ்) வங்கிக்கு வருமதியாகப்படும் அனைத்து தொகைகளில் அல்லது அதனது விடுவித்தலை நோக்கி ஏதேனும் அத்தகைய கணக்கின் (கணக்குகளின்) கடனுக்காக வெளிநிற்கும் ஏதேனும் தொகையினை பரிமாற்றலாம் மற்றும் அத்தகைய கணக்கு (கணக்குகள்) மீதான மிகுதிகள் எவ்வாறாயினும் அதனை செயற்படுத்தலாம் என்பதற்கும் அட்டைதாரர் உடன்படுகின்றார். தன்னுடைய முழுமையான தற்றுணிபினில் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வங்கியின் அப்போதிருக்கின்ற பரிவர்த்தனை வீதங்களில் அத்தியாசவசியமான பரிமாற்றல்களுடன் அத்தகைய ஒருங்கிணைப்பு, திரட்டல், எதிரீடு அல்லது பரிமாற்றத்தை ஈடுகட்டுவதற்கு அட்டைதாரர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

23.2. அட்டைதாரர் உள்ளடங்கலாக ஏதேனும் திறத்தவரின் பொறுப்பினை சிதையாது பாதுகாக்க வங்கியை இயலச்செய்யும் நோக்கத்திற்காக கட்டாணை அல்லது அழைப்பானை விநியோகிக்கப்பட்டதும் அல்லது அட்டைதாரரின் வங்குரோத்து அல்லது கடனிறுவகையின்மையை நிரூபிப்பதற்கு அல்லது வங்கி தோதானதெனக் கருதும் அத்தகைய ஏனைய காரணங்களுக்காக, அதனை அல்லது அதன்பொருட்டான ஏதேனும் பாகத்தின் வங்கிக்கு வருமதியாகவும் கடப்பாடுடையதுமான தொகையினை விடுவிப்பதில் அல்லது அதனை நோக்கியதாக பிரயோகிப்பதில் வங்கியின் பாகத்தில் ஏதேனும் இடையீட்டு கடப்பாடுகள் அற்றதாக வங்கி தோதானதெனக் கருதுமாறாக இதனகத்துக்கீழ் அல்லது அட்டைதாரரின் கடனுக்கான வேறேதேனும் பிணையம் அல்லது உத்தரவாதத்தின்கீழ் பெறப்பட்ட, மீளப்பெறப்பட்ட அல்லது உய்யப்பட்ட ஏதேனும் பணங்களை வங்கி விவேகமானதென கருதுகின்றவாறான அத்தகைய நேரத்திற்காக வங்கி எந்நேரத்திற்கும் இடத்திற்குமாக வைத்திருக்கலாம்.

23.3. வங்கி கடன் அட்டையை வழங்குகின்றபோது வைப்புக் கணக்கினில் நிதிகளை பிணையமாக இடுமாறு அட்டைதாரரை தேவைப்படுத்தலாம். வங்கி இப்பிணையங்களுக்கு எதிராக அட்டையின் வெளிநிற்றல்களை எதிரிடுவதற்கான உரிமையினை பேணும். அட்டைதாரர் எந்நேரத்திலேனும் இந்நிதிகளை அணுக விரும்பினால், வங்கிக்கு முற்கூட்டியே அறிவித்தல் தரவேண்டும் என்பதுடன் வங்கி அத்தகைய பிணையத்திலிருந்து செலுத்தப்படாத அட்டை வெளிநிற்றல்களது முழுமையான மீளப்பெறலின் மீது பிணையமாக வைத்திருக்கப்படும் அத்தகைய நிதிகளை முற்றான தற்றுணிபினில் விடுவிக்கும்.

### 24. சட்ட நடவடிக்கைகள்

ஏதேனும் காரணத்துக்காக, இவ்வுடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கத் தவறின், வங்கி இந்த அட்டைதாரர் உடன்படிக்கையை முடிவுறுத்தலாம் என்பதுடன் அதன்கீழ் வெளிநிற்கும் அனைத்து தொகைகளையும் மீளப்பெற நடவடிக்கையெடுக்கலாம். முழுமையான நட்டோத்தரவாத அடிப்படையில் சட்ட கட்டணங்கள் உள்ளடங்கலாக வங்கியினால் உறப்பட்ட அனைத்து செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவீனங்களுக்கு அட்டைதாரர் பொறுப்பாக காணப்படுதல் வேண்டும்.

### 25. அறிவித்தல்கள்

25.1. அட்டைதாரர் பெயர், தொழில் அல்லது வியாபாரம் அல்லது முகவரி (அலுவலகம் மற்றும்/அல்லது வதிவிடம்) மற்றும் முறையேயான தொலைபேசி இலக்கங்களிலான ஏதேனும் மாற்றத்தினை வங்கிக்கு உடனடியாக எழுத்துமூலமாக அறிவிப்பது கட்டாயமானதாகும்.

25.2. அனைத்து அட்டைகள், தனிப்பட்ட அடையாள இலக்கங்கள், கணக்குக் கூற்றுகள், இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான கோரல் அல்லது வேறேதேனும் தொடர்பாடலானது அட்டைதாரரின் இறுதியாக அறியப்பட்ட விலைப்பற்றுச்சிட்டை அல்லது வேறேதேனும் முகவரிக்கு தனிப்பட்டு விநி-யோகிக்கப்படும் அல்லது பொதிகள் சேவை அல்லது சாதாரண தபாலில் அனுப்பப்படும் என்பதுடன் அத்தகைய தொடர்பாடலானது நேரடியாக கையளித்தல் எனில் விநியோகித்த நாளிலு மற்றும் பொதிகள் சேவை அல்லது தபாலில் அனுப்பப்பட்டதெனில், அனுப்பியதன் பின்னராக மூன்று (3) வேலைநாட்களில் அட்டைதாரருக்கு சேர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படும்.

25.3. இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் முதன்மை அட்டைதாரருக்கு அனுப்பப்பட்ட அனைத்து தொடர்பாடல்களும் முதன்மை அட்டைதாரருக்கும் அதேப்போன்று துணைநில் அட்டைதாரருக்கும் அனுப்பப்பட்ட தொடர்பாடலாக கருதப்படுதல் வேண்டும்.

25.4. மின்னஞ்சல், குறுந்தகவல், தொலைநகல், தொலைபேசி இன்னபிறவற்றின் ஊடாக வங்கியின் அனைத்து சந்தைப்படுத்தல் தகவல்கள் அல்லது அதனது உற்பத்திகள் சேவைகளை பெற்றுக்கொள்ள அட்டைதாரர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

**26. பொதுவானவை**

26.1. அட்டைதரரின் அறிவுறுத்தல்களின் மீது நன்னம்பிக்கையுடன் செயற்படுவதற்கான பொறுப்பினை வங்கி கொண்டிருத்தலாகாது.

26.2. அத்தகைய ஏதேனும் அறிவுறுத்தலைப் பதிவுசெய்யவும் மற்றும் நீதிமன்றம் அல்லது சட்ட செயன்முறைகளில் சான்றாக அத்தகைய பதிவுகளை பயன்படுத்துவதற்கும் அட்டைதாரர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

26.3. இவ்வுடன்படிக்கையின்கீழ் அட்டைதாரரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ள அனைத்து தொகைக-ளையும் சேகரிப்பதற்காக முகவர் ஒருவரை நியமிக்க வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

26.4. அட்டைதாரருக்கான அறிவித்தலுடனோ அன்றியோ இவ்வுடன்படிக்கையின்கீழான அதனது உரிமைகள் அல்லது கடப்பாடுகளது முழுமையை அல்லது ஏதேனும் பாகத்தினை அட்டைதாரரின் ஒப்புதலின்றி எந்நேரத்திலும் குறித்தொதுக்க வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

26.5. அட்டைதாரர் காலத்திற்கு காலம் வங்கியினால் கோரப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக ஆவணத்தை (ஆவணங்களை) கையொப்பமிட பொறுப்பேற்கின்றார்.

26.6. இதனகத்து ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் இழப்பீடுகளானவை திரண்டவை என்பதுடன் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் உரிமைகள் அல்லது இழப்பீடுகளுக்கு பிரத்தியேகமானவை அல்ல.

26.7. வங்கி எந்நேரத்திலும், நிபந்தனைகளின்றியோ அல்லது வேறுவகையிலோ, இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் அல்லது ஏதேனும் தவறுகையை அல்லது அட்டைதாரரின் மீறுகையை விட்டழிக்கலாம், எதுஎவ்வாறெனினும் அத்தகைய விட்டழிப்பானது வங்கியினால் எழுத்துமூலம் வழங்கப்படவேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்டவாறாயன்றி இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏதேனும் தவறுவை அல்லது மீறுகையின் வங்கியின் பாகத்தின் மீதான எந்தவொரு நிபந்தனைகள் அல்லது மன்னித்தல் மற்றும் அலட்சியம் அல்லது சகிப்புத்தன்மை எதுவும் வங்கியின் உரிமைகள் மற்றும் தத்துவங்களின் விட்டொழிப்பாக செயற்படாது அத்துடன் எந்தவொரு விட்டொழிப்பும் வங்கிக்கு எழுத்துமூலமாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி வங்கியினால் செய்யப்பட்டது அல்லது செய்யப்படாததினால் ஊகிக்கப்படுவதாகவோ அல்லது கருதப்படுகின்றதாகவோலாகாது. எந்தவொரு விட்டொழிப்பும் அது தொடர்புடைய குறித்த விடயத்திற்கு மாத்திரமே விட்டொழிப்பானாக செயற்படும் என்பதுடன் வேறு ஏதேனும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளது விட்டொழிப்பாகவோ அல்லது விடுவிப்பாகவோ செயற்படுதலாகாது.

26.8. முறையேயான வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட விலைக்கழிவுகள்/சலுகைகள் தொடர்பில், வங்கியை பொறுப்புடையதாக வைத்திருக்கமுடியாது மற்றும் விநியோகம், தரம், வடிவமைப்பு, விசேட குறிப்பீடுகள் அல்லது இச்சலுகைகள் தொடர் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏனையவற்றுக்கு எந்த உத்தரவாதமும் கொண்டிராது அல்லது ஏதேனும் பிரதிநிதித்துவங்களை வழங்கவும்மாட்டாது.

26.9. வங்கியின் அஞ்சல்கள் மீளளிக்கப்பட்டும் அட்டைதாரரினை தொடர்புகொள்ளவும் முடியாத சந்தர்ப்பங்களில், வங்கியின் அட்டை விண்ணப்பப் படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட மற்றொரு முகவரிக்கு கணக்கு கூற்றுகள் மற்றும்/அல்லது தொடர்பாடல்களை வழிமாற்றும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**27. நியதிகளின் மாறிகள்**

27.1. வங்கி காலத்திற்கு காலம் இவ்வுடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றலாம். நியதிகள் மற்றும்/அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளின் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு, அத்தகைய மாற்றம் குறித்த அறிவித்தலானது எழுத்து மூலமாக அல்லது அதுகுறித்த வெளியீடு மூலமாகவோ வங்கியினால் அட்டைதாரருக்கு வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய மாற்றங்களானவை அனைத்து செலுத்தப்படாத நிதிசார் விதிப்பனவுகள், கட்டணங்கள், காசு முற்பணங்கள், செலவுகள் மற்றும் அட்டை கொடுக்கல்வாங்கல்களுக்கு பிரயோகிக்கப்படும்.

27.2. இவ்வுடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏதேனும் அத்தகைய மாற்றங்களது பயனுறுத் திகதியின் பின்னர் அட்டையை வைத்திருத்தல் அல்லது பயன்படுத்தலானது அட்டைதாரரினாலான ஒதுக்குகளின்றி அத்தகைய மாற்றங்களது ஏற்பினை உள்ளடக்குவதாக கருதப்படுதல் வேண்டும். முன்மொழியப்பட்டுள்ள மாற்றங்களை அட்டைதாரர் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், பயனுறுத் திகதிக்கு முன்னதாக எழுத்துமூல அறிவித்தலை வழங்கி அட்டையின் பயன்பாட்டினை அட்டைதாரர் முடிவுறுத்த வேண்டும் அத்தடன் 18 ஆம் உறுப்புரை (முடிவுறுத்தல்) அது முதல் செயற்படுத்தப்படும்.

**28. உடன்படிக்கையின் பயன்கள்**

28.1. இவ்வுடன்படிக்கையின் முடிவுறுத்தல் எதுஎவ்வாறிருப்பினும், இதனகத்தான அனைத்து ஏற்பாடுகளும் உள்ளாகும் ஏதேனும் அட்டை கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அட்டைதாரர் மற்றும் எவரேனும் துணைநில் அட்டைதாரரின் (அட்டைதாரர்களின்) இதனகத்துக்கீழ் உறப்படும் பொறுப்புக்கள் தொடர்பில் அட்டைதாரர் மற்றும் எவரேனும் துணைநில் அட்டைதாரருக்கு (அட்டைதாரர்கள்) எதிராக தொடர்ந்தம் முழு வலுவும் பயனும் கொண்டிருத்தல் வேண்டும்

28.2. இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஒவ்வொன்றும் பிரிக்கப்படக்கூடியதாகவும் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தக்கூடியதாகவும் காணப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் நேரத்தில் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏதேனுமொன்றோ அல்லது பலவோ செல்லுபடியற்றதாகவோ, சட்டவிரோதமானதாகவோ அல்லது நடைமுறைப்படுத்தப்படமுடியாததா ஆகினால் அல்லது மாறினால் எஞ்சிய ஏற்பாடுகளின் செல்லுபடியாந்தன்மை, சட்டத்தன்மை அல்லது நடைமுறைப்படுத்தக்ககூடியதன்மையானது அதன்பொருட்டு ஏதேனும் வழியில் பாதிக்கப்படவோ அல்லது சேதப்படுதலோலாகாது.

**29. வெளிநாடுகளுக்கு செல்லும் அட்டைதாரர்**

29.1 நிரந்தர தொழில்வாய்ப்பினில் வெளிநாடுகளுக்கு இடம்பெயரும் மற்றும்/அல்லது செல்லும், அல்லது அந்நேரத்தில் வலுவிலிருக்கும் வெளிநாட்டுப் பரிவர்த்தனை ஒழுங்குபடுத்தல்களின் வரைவ-ிலக்கணங்கள்பிரகாரம் ''வதிவற்றோர்'' எனக்கருதப்படும் அட்டைதாரர் ஒருவர் வங்கிக்கு எழுத்துமூலமாக அறிவித்தல்வேண்டும், அத்துடன் அனைத்து விலைப்பற்றுச்சிட்டையிடப்பட்ட மற்றும் விலைப்பற்றுச்சிட்டையிடப்படாத விதிப்பனவுகளை தீர்ப்பனவாக்குதல் வேண்டும் மற்றும்

அட்டைதாரர்கள் வெளியேறுவதற்கு முப்பது (30) நாட்களுக்கு முன்னதாக அட்டை மற்றும் ஏதேனும் துணைநில் அட்டையை (அட்டைகளை) சமர்ப்பித்தலும் வேண்டும். அட்டை மற்றும் துணைநில் அட்டையின் (அட்டைகளின்) பயன்பாடானது முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படும் என்பதுடன் 18 ஆம் உறுப்புரையும் (முடிவுறுத்தல்) பிரயோகிக்கப்படும்.

29.2 அட்டைதாரர் நலனிற்காகவோ அல்லது தொழிலுக்காகவோ அல்லது வெளிநாடுகளிலான நிரந்தர வதிவிடத்திற்காகவோ இலங்கையிலிருந்து வெளியேறினால், அவருக்கு வழங்கப்பட்ட அட்டையை, NRFC, RFC, RNNFC கணக்கு மற்றும் கரைகடந்த கணக்கொன்றின் பற்றில் காணப்படும் நிதிகளுக்கு அப்பால் அட்டைமீது வரையப்பெறும் வெளிநாட்டு செலாவணிகளுக்கான தீர்ப்பனவுகளை மேற்கொள்ளும் அட்டையாக காணப்படாதவிடத்து, வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 30 வெளிநாட்டு குடிமக்களுக்கான அட்டைகள்

30.1 வெளிநாட்டு குடிமகனுக்கான அட்டையொன்று இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட தற்போதிருக்கும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு வழங்கப்படும்.

அட்டைதாரர் அவர் நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுவாராயின் ஒரு மாதத்திற்கு முன்னதாக, மற்றும்/அல்லது அவரது வதிவிட விசா காலாவதியாகும் ஒரு மாதத்திற்கு முன்னதாக வங்கிக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று இடம்பெறுவதற்கு முன்னதாக அவர் விலைப்பற்றுச்சிட்டையிடப்பட்ட மற்றும் விலைப்பற்றுச்சிட்டையிடப்படாத விதிப்பனவுகளை முழுமையாக தீர்ப்பனவாக்கி வங்கியிடம் அட்டைகளை சமர்ப்பிக்கவும் வேண்டும்.

## 31 ஆளும் சட்டங்கள்

31.1 நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையின் சட்டங்களினால் ஆளப்படுகின்றனவாகவும் அதற்கிசைவாக பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும் மற்றும் அட்டைதாரர் இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக நியாயாதிக்கத்திற்கு கைமாற்றமுடியாதவாறு இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றார். எவ்வாறாயினும் அத்தகைய சமர்ப்பணமானது வேறேதேனும் நிய-ாயாதிக்கத்தினுள் அட்டைதாரருக்கு எதிராக வழக்கு நடவடிக்கையொன்றை கொணருவதற்கான வங்கியின் உரிமைக்கு பங்கமாகுதலாகாது.

31.2 நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன அத்தகைய திருத்தங்கள் சட்டத்தினால், அரசாங்க ஒழுங்குபடுத்தல் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டிருப்பின், தன்னியக்கமாக திருத்தப்பட்டதாக நிலைநிற்கும். அட்டை கணக்கு சட்டப்பூர்வமான மற்றும் செல்லுபடியான நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும். அட்டை அல்லது அட்டை கணக்கினை வேறேதேனும் நோக்கத்திற்காக, அட்டைதாரர் பயன்படுத்தும், அல்லது மூன்றாம் திறத்தவரை பயன்படுத்த அனுமதிக்கும் சந்தர்ப்பத்தில், அட்டைதாரர் அத்தகையப் பயன்பாட்டிற்கு பொறுப்பாகுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பயன்பாட்டின் விளைவாக அனைவரும் அல்லது எவரேனும் திறத்தவர்களினால் செலுத்தப்படும் அனைத்து தொகைகள் மற்றும் /அல்லது செலவீனங்களுக்காக வங்கி அல்லது தொடர்புடைய கொடுப்பனவு அட்டை ஒழுங்கமைப்பிற்கு மீளவழங்கவும் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில் அத்தகைய கொடுப்பனவுகளை உடனடியாக நிறுவத்தவும்

இவ்விடயத்தினை வெளிநாட்டு செலாவணி திணைக்களப் பணிப்பாளரின் கவனத்துக்கு கொணரவுமான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

31.3 அட்டையில் அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டு செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் முன்னெடுக்கப்படுகின்றன என சந்தேகிக்க வங்கிக்கு நியாயமான அடிப்படைகள் காணப்படுமாயின், அவ்வட்டையின் வெளிநாட்டுப் பரிவர்த்தனையின் கிடைப்பனவினை உடனடியாக இடைநிறுத்தவும் வெளிநாட்டு செலாவணி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு இவ்விடயத்தினை அறிக்கையிடவுமான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அட்டையில் வெளிநாட்டு செலாவணிகளில் அட்டைதாரரினால் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளவுமான உரிமையையும் வங்கி கொண்டுள்ளது.

31.4 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி பணிப்புரையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, அட்டைதாரர் விண்ணப்பப்படிவத்தினை சமரப்பிக்கின்ற போது இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணி திணைக்களத்தின் பணிப்பாளரிடம் வெளிப்படுத்துகையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

31.5 அதனை சமர்ப்பிப்பதன் மூலம், காலத்திற்கு காலம் திருத்தப்படக்கூடியவாறாக 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் அட்டைதாரர் வாசித்து புரிந்துக்கொண்டுள்ளார் என்பதனை அட்டைதாரர் உறுதிப்படுத்துகின்றார்.

31.6 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பணிப்புரையானது இதனகத்து இணைக்கப்பட்டு இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் உள்ளிணைந்த பாகமொன்றை ஆக்குவதுடன் அட்டையில் வெளிநாட்டு செலாவணிகளை முன்னெடுப்பதற்காக வாசித்து, புரிந்துக்கொள்ளப்பட்டு பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்.

**இலத்திரனியல் நிதி பரிவர்த்தனை அட்டைகளது (EFTCs) அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்.**

1. வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 5, 6 மற்றும் 7 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்படும் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியமங்களின்பிரகாரம், பின்வருவனவற்றுக்கு உட்பட்டு, இலங்கைக்கு வெளியில் வதியும் நபர்களுக்கு வெளிநாட்டு செலாவணிகளிலான கொடுப்பனவை மேற்கொள்ள இலங்கையிலுள்ள அல்லது வதியும் நபர்களுக்கு EFTC களை வழங்க அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

2. இலங்கையில் உள்ள அல்லது வதியும் நபர்களுக்கு (இதனகத்துப்பின்னர் ‘‘அட்டைதாரர்கள்’’ எனக்குறிப்பீடு செய்யப்படும்) விநியோகிக்கப்பட்ட EFTC களானது இப்பணிப்புரைகளின் 10.1 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கான கொடுப்பனவுகளது பயன்பாட்டுக்காகவன்றி தனிப்பட்ட இயல்பிலான தற்போதைய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் மாத்திரமே இலங்கைக்கு வெளியில் வதியும் நபர்களுக்கான கொடுப்பனவினை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தவேண்டும்.

3. மேலதிகமாக, பின்வரும் நபர்களுக்கு, அத்தகைய அட்டைதாரர்களது முறையேயான கணக்குகளில் வைத்திருக்கப்படும் நிதிகளுக்கு எதிராக, பற்று அட்டையை விநியோகிக்க அனுமதிக்கப்பட்ட விநியோகத்தர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

(a) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கத்திற்காக தற்காலிகமாக இலங்கைக்கு வெளியில் சென்றிருக்கும் இலங்கையில் வதியும் நபர்

(b) வியாபார வெளிநாட்டு நாணய கணக்கு (BFCA) உடைமையாளர்

(c) தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்கு (PFCA) உடைமையாளர்

(d) இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கு (DRA) அல்லது இராஜதந்திர ரூபா கணக்கு உடைமையாளர்

(e) உள்நோக்கிய முதலீட்டு கணக்கு (IIA) உடைமையாளர்

(f) மூலதன கொடுக்கல்வாங்கல் ரூபா கணக்கு (CTRA) உடைமையாளர்

(g) குடியகல்வோர் பணவனுப்பக்கூடிய வருமானக் கணக்கு (ERIA) உடைமையாளர்

(h) இலங்கையில் வதியாதோர் ரூபா கணக்கு (NRRA) உடைமையாளர்

(i) இலங்கையில் வதிவோர் ரூபா நடைமுறைக் கணக்கு (RGRCA) உடைமையாளர்

(j) சிரேஷ்ட வெளிநாட்டு பிரஜைகளது ரூபா கணக்கு (SFNRA) உடைமையாளர்

4. அதிகாரமளிக்கப்பட்ட விநயோக்கத்தர்கள் கடன் இடரினைக் இழிவளவாக்குவதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடு மற்றும் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தவதன் பேரில், பின்வரும் நபர்களுக்கு கடனட்டைகளை வழங்கலாம்.

(a) இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட இராஜதந்திர கடவுச்சீட்டு மற்றும்/அல்லது இராஜதந்திர அடையாள அட்டைகளைக் கொண்டுள்ள வெளிநாட்டு குடிமக்கள்

(b) இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்தகைய நபர்களினால் துணை ஈடாக/பிணையமாக வைத்திருக்கப்படும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு நாணய கணக்குகளில் காணப்படும் நிதிகளின் 90% எல்லை வரையில் மாத்திரம்; அத்தகைய கடனட்டைகள் மீது உறப்படும் செலவீனங்களின் தீர்ப்பனவுகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது EFTC காணப்படுமாயின் அவற்றுடன், வெளிநாட்டிலிருந்து உள்நோக்கிய பணவலுப்பல்கள் ஊடாக தீர்ப்பனவாக்கப்படுதல் வேண்டும்.

(c) அத்தகைய கடனட்டைகளில் உறப்படும் செலவீனங்களுக்கு உட்பட்டதாக வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது EFTC (காணப்படுமாயின்) வைத்திருக்கப்படும் நிதிகளுடன் அல்லது அட்டைதாரரது இலங்கை ரூபா வருமானங்களுடன், உள்நோக்கிய பணவலுப்பல்கள் ஊடாக தீர்ப்பனவாக்கப்படுதல் வேண்டும் என்பதற்கு உட்பட்டு இலங்கையிலும் மற்றும் இலங்கையில் வதிகையில் வேறேதேனும் நாட்டிலுமாக இரட்டைக் குடியுரிமைப் பெற்றுள்ள இலங்கையர்களுக்கு

5. இப்பணிப்புரைகளின் 3 ஆம் மற்றும் 4 ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் EFTCகள் பின்வருவனவற்றுக்கு உட்பட்டு பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

(a) இலங்கையிலான முதலீட்டு கொடுப்பனவுகளது பயன்பாட்டுக்காகவன்றி இலங்கையிலான ஏதேனும் இலங்கை ரூபாவிலான கொடுப்பனவானது அனுமதிக்கப்படுகின்றது;

(b) EFTC விநியோகிக்கப்பட்டிருக்கையில், சுதந்திரமாக அனுமதிக்கப்பட்ட எந்தவொரு நோக்கத்திற்காகவும் இலங்கைக்கு வெளியில் வதியும் நபருக்கான ஏதேனும் கொடுப்பனவு;

(i). இலங்கைக்கு வெளியில் வதியும் ஒரு நபராக விளங்க PFCA இனை கொண்டிருக்கும் உடைமையாளர்

(ii). DFCA இன் உடைமையாளர்

(iii). IIA உடைமையாளர்

(iv). ERIA உடைமையாளர்

(c) EFTC விநியோகிக்கப்பட்டிருக்கையில், அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட தன்மையின் நடைமுறை கொடுக்கல்வாங்கலுக்காக (இப்பணிப்புரைகளின் 10.1 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக கொடுப்பனவுகளது பயன்பாட்டுக்காகவன்றி) இலங்கைக்கு வெளியில் வதியும் நபருக்கான ஏதேனும் கொடுப்பனவு;

(i). BFCA உடைமையாளர்

(ii). இலங்கைக்கு வெளியில் வதியும் நபராக விளங்கும் PFCA உடைமையாளர்

(iii). வியாபார, கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக தற்காலிகமாக இலங்கைக்கு வெளியில் சென்றுள்ள இலங்கையில் வதியும் நபர்

(iv). இலங்கைக்கு வெளியில் தாபிக்கப்பட்டுள்ள/கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் அல்லது கம்பெனியாக காணப்படும் NRRA உடைமையாளர்

(v). DRA உடைமையாளர்

(vi). RGRCA உடைமையாளர்

(vii). SFNRA உடைமையாளர்

(d) EFTC அட்டைதாரர் அனுமதிக்கப்பட்டுள்ள, அத்தகைய அட்டை விநியோ-கிக்கப்பட்டிருக்குமிடத்து, மூலதன கொடுக்கல்வாங்கலுக்காக இலங்கைக்கு வெளியில் வதியும் நபரொருவருக்கான ஏதேனும் கொடுப்பனவு

(i). BFCA உடைமையாளர்

(ii). இலங்கையில் வதியும் நபராக விளங்கும் PFCA உடைமையாளர்

6. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகள்/நிறுவகங்களுக்கு

(அதாவது பெருநிறுவனங்களுக்கு), இலங்கையில் வதியும் நபர்களான அத்தகைய பெருநிறுவனங்களது பதவிவழி ஊழியர்கள் அல்லது பணிப்பாளர்களின் பெயர்களில், கீழே 10.1 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கான கொடுப்பனவுகளது பயன்பாட்டுக்காகவன்றி அத்தகைய பெருநிறுவனங்களது நடைமுறை கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய வெளிநாட்டு செலாவணியின் ஏதேனும் கொடுப்பனவினை மேற்கொள்வதற்காக அனுமதிக்கப்பட்ட உள்ளக நடைமுறைகளின் பிரகாரம், EFTCகளை அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் விநியோகிக்கலாம்.

7. BFCAs, PFCAs, DFCAs, DRAs, IIAs, ERIAகளில் வைத்திருக்கப்படும் நிதிகளுக்கு எதிராக வெளிநாட்டு செலாவணியில் தீர்ப்பனவுகளை மேற்கொள்ள அல்லது உள்நோக்கிய பணவலுப்பல்கள் ஊடாக வெளிநிற்கும் தொகைகள் தீர்ப்பனவாக்கப்படுகின்றன என்பதன் அடிப்படையில் EFTC விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பம் தவிர்த்து, அட்டைதாரர் நிரந்தர வதிவிடம் அல்லது வேலைவாய்ப்புக்காக இலங்கையை விட்டு நிரந்தரமாக குடியகல்வாராயின் அல்லது வெளியேறுவாராயின் இலங்கையிலுள்ள அத்தகைய நபருக்கு விநியோகிக்கப்பட்ட அட்டையை விநியோகித்த வங்கிக்கு சமர்பிக்கவேண்டும் எனும் நிபந்தனைக்கு உட்பட்டு இலங்கையில் இருக்கும் அல்லது வதியும் நபர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் EFTCகளை விநியோகிக்கலாம்.
8. பற்று அட்டையைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயங்களில் பணம்மீளப்பெறல் அல்லது கடனட்டை ஊடாக காசு முற்பணத்தினை பெற்றுக்கொள்ளல் தொடர்பில், அத்தகைய பணங்கள் இப்பணிப்புரைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக நிலையியல் பதிவு பேணல் தேவைப்பாடு வரையில் சான்றுகளைப் பேண அட்டைதாரர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட விநி-யோகத்தர்கள் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்கு வெளியில் வருகின்ற ஏதேனும் நோக்கத்திற்கான EFTC ஊடாக இலங்கைக்கு வெளியில் வதியும் நபருக்கான ஏதேனும் கொடுப்பனவுக்காக, வெளிநாட்டு செலாவணி திணைக்களத்தின் பணிப்பாளரின் முற்கூட்டிய எழுத்துமூல அனுமதியினை நாடுமாறு அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் அட்டைதாரர்களை பணிக்கலாம்.

10. ஏனைய நிபந்தனைகள்

10.1 அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்ட EFTCகள் பின்வருவனவற்றிற்கு பயன்படுத்தப்படக்கூடாதென அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்:

a) வெளிநாட்டு செலாவணிகளில் பங்குபெறல் (Forex Trading);
b) மெய்நிகர் நாணய கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்;
c) இலங்கைக்கு வெளியேயான பந்தயம், ஆட்டங்கள் மற்றும் சூதாட்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்;
d) 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டம் மற்றும் அதனகத்தான ஏதேனும் திருத்தங்களின்கீழ் விநியோகிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு வர்த்தக நோக்கத்திற்காக இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவுகள்

10.2 அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் இப்பணிப்புரைகளின் EFTCகள் மீதான தற்போதைய ஒழுங்குவிதிகளை அட்டைதாரர்களுக்கு அவர்கள் விரும்பிய தொடர்பாடல் மொழியில் எழுத்துமூலமாக (இலத்திரனியல் அல்லது ஆவண அமைப்பில்) மதிப்பிட்டு தெரிவிக்கலாம் அத்துடன் EFTCகளை விநியோகிக்கின்ற நேரத்தில் பின்னிணைப்பு I இற்கிணங்க அத்தகை அட்டைதாரரிடமிருந்து வெளிப்படுத்துகையும் பெற்றுக்கொள்ளலாம்.

10.3 EFTC களைப் பயன்படுத்தி இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மாத்திரமே அட்டைதாரர்களினால் முன்னெடுக்கப்படுகின்றன என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட விநியோக்கத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

10.4 அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் EFTCகளிலிருந்து வெளிநாட்டு செலாவணி கொடுப்பனவு/பணம் மீளப்பெறலினை இடைநிறுத்துவதற்கு உரிய விழிப்புக்கவனத்தினை செயற்படுத்தி

உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் மற்றும் இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்ட நோக்கத்திற்காகவன்றி வெளிநாட்டு செலாவணிகளில் கொடுப்பனவு/பணம் மீளப்பெறலினை எவரேனும் அட்டைதாரர் மேற்கொள்கின்றார் என சந்தேகிக்க நியாயமான காரணங்கள் காணப்படுமாயின், அவ்விடயத்தினை பணிப்பாளர் - வெளிநாட்டு செலாவணி திணைக்களத்தின் கவனத்திற்கு கொணரலாம்.

10.5 அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் ஒவ்வொரு அட்டைதாரரினதும் வெளிநாட்டுப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை ரூபாவிலான பரிவர்த்தனைகளை தனித்தனியாக அடையாளப்படுத்தலாம்.

10.6 அதிகாரமளிக்கபட்ட விநியோகத்தர்கள் முதன்மை அட்டைதாரர்களும் இலங்கைக்கு வெளியில் வதியும் நபர்களாக அல்லாதவிடத்து இலங்கைக்கு வெளியில் வதியும் நபர்களுக்கு துணைநில் அட்டைகளாக RFTCகளை வழங்குதலாகாது.

10.7 அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அல்லது கல்வி நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியில் சென்றுள்ள அட்டைதாரர்களது வதிவிட நிலைகளிலான மாற்றங்களை உறுதிப்படுத்தவும் மற்றும் அது தொடர்பில் எந்நேரத்திலும் இப்பணிப்புரைகளுடன் இணைந்ததாக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

10.8 நீக்கப்பட்ட பரிவர்த்தனை கட்டுப்பாட்டு சட்ட ஏற்பாடுகளின்கீழ் ஏலவே விநியோகிக்கப்பட்ட EFTCகள், இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகுதல் வேண்டும்.

11. மாதாந்த அறிக்கையிடல் - அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் வெளிநாட்டு நாணயங்களிலான பணம் மீளப்பெறல் உள்ளடங்கலாக, வெளிநாட்டுப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டுள்ள அட்டைதாரர் தொடர்பில் பெறுமதியினை கருத்திற்கொள்ளாது அனைத்துப் பரிவர்த்தனைகளது விபரங்களையும், மாதாந்த அடிப்படையில் வெளிநாட்டு செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் கண்காணிப்பு முறைமை – FOREX Net ஊடாக இலத்திரனியல் வழியாக மாத்திரம் பணிப்பாளர் - வெளிநாட்டுப் செலாவணி திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

12. அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள் இதனகத்தான பின்னிணைப்பு I மற்றும் பின்னிணைப்பு II உள்ளடங்கலாக EFTCகளது வழங்கல் மற்றும் புதுப்பித்தல்கள் தொடர்பிலான ஏதேனும் தகவல் அல்லது ஆவணத்தினை, இலங்கை மத்திய வங்கியின் உறுதிப்படுத்தலிற்காக, ஆறு வருட காலப் பகுதிக்கு அல்லது கட்டாய பதிவு பேணல் காலத்தினில் எது நீளமானதோ அக்காலப்பகுதிக்கு வைத்திருத்தல் வேண்டும்.

13. இப்பணிப்புரைகளின் நோக்கங்களிற்காக

I) " இலத்திரனியல் நிதி பரிமாற்ற அட்டை (EFTC)" என்பது பற்று, வரவு அல்லது வேறேதேனும் வடிவத்தில் பெறுமதிகளை பரிமாற்ற பயனரை இயலச்செய்வதும் கடனட்டைகள், பற்று அட்டைகள் மற்றும் வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இசைவாகவிருக்கும் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்களினால் அடையாளப்படுத்தக்கூடிய கொடுக்கல்வாங்கல் விபரங்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட பெறுமதி அட்டைகளை உள்ளடக்குவதுமான அட்டை அல்லது சாதனம் எனப்பொருள்படும்.

II) ''பற்று அட்டை'' என்பது அட்டைதாரர் கணக்கின் கடன் நிலுவையில் இருந்து நேரடியாக பற்றுவைக்கப்பட்டு பணத்தினை மீளப்பெறல் மற்றும்/அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளது கொள்வனவிற்காக கொடுப்பனவுகளை நிறைவேற்றலுக்காக பயன்படுத்தப்படக்கூடிய கொடுப்பனவு அட்டையொன்று எனப்பொருள்படும்.

III) ''கடனட்டை'' என்பது பயன்படுத்தப்பட்ட கடனை குறித்துரைக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னதாக முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ தீர்ப்பனவாக்கப்படக்கூடியவாறு, அட்டைதாரருக்கு விநியோகத்தரினால் அளிக்கப்பட்ட கடன் வரிசை உள்ளடங்கியிருக்கும் கொடுப்பனவு அட்டை எனப் பொருள்படும்.

IV) ''தனிப்பட்ட இயல்பு'' என்பது அட்டை உடைமையாளர், வாழ்க்கைத்துணை, குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் பயன்பாட்டுக்கு மாத்திரமானது எனப்பொருள்படும்.

V) ''நடைமுறை கொடுக்கல்வாங்கல்கள்'' என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுப் செலாவணி சட்டத்தின் அதேப் பொருளினை கொண்டிருத்தல் வேண்டும்.

VI) ''மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்'' என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுப் செலாவணி சட்டத்தின் அதேப் பொருளினை கொண்டிருத்தல் வேண்டும்.

VII) ''மெய்நிகர் நாணயம்'' என்பது எண்ணிய ரீதியாக வர்த்தகமாக்கப்படக்கூடிய பெறுமதியின் எண்ணியப் பிரதிநிதித்துவமாகும் என்பதுடன் பரிவர்த்தனை ஊடகமொன்றாகவும் செயற்படக்கூடியதுமாகும்; மற்றும்/அல்லது கணக்கின் அலகொன்றுமாகும்; மற்றும்/அல்லது பெறுமதியின் சேமிப்பாயினும் எந்தவொரு நியாயாதிக்கத்திலும் சட்ட நடவடிக்கை அந்தஸ்தினை கொண்டிருக்காது மற்றும் எந்தவொரு நியாயாதிக்கத்திலும் விநியோகிக்கப்படக்கூடியதாகவோ அல்லது உத்தரவாதமளிக்கப்படக்கூடியதாகவோ காணப்படமாட்டாது.

VIII) ''இலங்கையில் வதியும் ஆட்கள்'' என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுப் செலாவணி சட்டத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையின் நிபந்தனைகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

14. இலங்கையில் வதியும் ஆட்களுக்கு EFTCகளது விநியோகத்துடன் தொடர்புடைய தேவைப்பாடுகளை குறித்துரைத்து அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் நவம்பர் மாத 20 ஆந்திகதிய 02 ஆம் இலக்க பணிப்புரைகள் இத்தால் இல்லாமலாக்கப்படுகின்றது.

15. முந்தைய பணிப்புரைகளின் ஒழித்தலானது 14 ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. ஒழித்தலிற்கு முன்னதாக அவற்றின்கீழ் திரண்ட உரிமைகள் அல்லது உறப்பட்ட தண்டப்பணங்கள் அல்லது பொறுப்புக்கள் எவற்றையும் மேலுள்ளவை பாதித்தலாகாது.

16. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்ட எதுவும் வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து இப்பணிப்புரைகளின்கீழான வெளிநாட்டு செலாவணிகளில் ஈடுபடும் அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்களை அல்லது நபர்களை நீக்குவதாகவோ, விலக்களிப்பதாகவோ அல்லது தடைசெய்வதாகவோ பொருள்கொள்ளப்படுதலாகாது.

17. இப்பணிப்புரைகள் 2021 மார்ச் 22 ஆந்திகதியிலிருந்து வலுவுருவதாக நடைமுறைக்குவருதல் வேண்டும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுப் செலாவணிகள்

2021 மார்ச் 18